# இராமலிங்க விலாசம்

# இராமாயண ஓவியக் குறிப்புகள்



தொகுப்பாசிரியர்

இரா. ப. கருணானந்தன், எம்.ஏ.,

காப்பாட்சியர்.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

சென்னை - 600 028

1990

# இராமலிங்க விலாசம்

# இராமாயண ஓவியக் குறிப்புகள்

தொகுப்பாசிரியர்

இரா. ப. கருணானந்தன், எம்.ஏ.,
காப்பாட்சியர்.

பதிப்பாசிரியர்

நடன. காசிநாதன் எம்.ஏ.,
இயக்குநர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-28

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை-600 028
1990

முதற் பதிப்பு—1990
தொ. பொ. ஆ. துறை வெளியீடு எண் : 105

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

# இராமலிங்கவிலாசம்
# இராமாயண ஓவியக் குறிப்புகள்

தொகுப்பாசிரியர்

இரா. ப. கருணானந்தன், எம்.ஏ.,
காப்பாட்சியர்,

நூல் சேர்க்கை
எண்

பதிப்பாசிரியர்

நடன. காசிநாதன், எம்.ஏ.,
இயக்குநர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை

விலை ரூ.

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

# பொருளடக்கம்


பக்கம்

முன்னுரை

**1 இராமாயண ஓவியக் குறிப்புகள்**

பேச்சு வழக்கு நடை ... 3

இராமாயண ஓவியக் கதைச் சுருக்கம் ... 4

இலக்கிய ஒப்பு நோக்கு ... 6

சில செய்திகள் ... 12

**2 ஓவியக் குறிப்பு**

மேற்குச் சுவர் இடப்புறம் ... 14

வடக்குச்சுவர் ... 16

கிழக்குச்சுவர் ... 18

வாசலுக்கு மேலே ... 19

வாசலுக்கு இடப்புறம் ... 20

தெற்குச் சுவர் ... 22

வாசலுக்கு இடப்புறம் உள்ள தெற்குச் சுவர் ... 24

மேற்குச் சுவர் வலப்புறம் ... 25

இராமர்பீடம் ஓவியக் குறிப்புகள் ... 26

**3 பாகவத ஓவியங்கள்**

மேற்குச் சுவர் இடப்புறம் ... 28

வடக்குச் சுவர் ... 30

கிழக்குச் சுவர் - வலப்புறம் ... 31

கிழக்குச் சுவர் - இடப்புறம் ... 33

அர்த்தமண்டபம் தெற்குச் சுவர் ... 34

அர்த்தமண்டபம் மேற்குச் சுவர் ... 36

# முன்னுரை

இந்தியத் திருநாட்டில் இராமாயணம், பாரதம் போன்ற இதிகாசங்களின் கருத்துக்கள் மக்கள் மனதில் தொன்றுதொட்டே வேரூன்றி இருந்திருக்கின்றன. இந்து சமயக் கதைகளின் கருத்துக்கள் மட்டுமல்லாது சமண மற்றும் பௌத்த சமயக் கதைகளின் கருத்துக் களும் மக்களிடையே நல்ல செல்வாக்கைப் பெற்றிருந்திருக்கின்றன. ஆதலால் நூற்றாண்டுகள் தோறும் அவ்விதிகாசங்கள் மற்றும் காவியங்களின் பிரதிகள் மீண்டும் மீண்டும் படி எடுக்கப்பட்டு மக்களால் கற்றுணரப்பட்டன. அக்காவியங்களைப் பொதுமக்கள் படிப்பதற்கும், கேட்பதற்கும் அறக்கொடை அளிக்கப்பட்டு இருக்கிறது என்பது கல்வெட்டுக்களால் புலனாகிறது. அவ்விதி காசங்களின் கருப்பொருள் நூல்களாக எழுதப்பட்டிருப்பதோடு கோயில்களின் சுவர்களில் சிற்பமாகவும், மண்டபங்களின் விதானங் களில் வண்ண ஓவியங்களாகவும் முறையே செதுக்கப்பட்டும், வரையப்பட்டும் வந்துள்ளன. கோயில்களின் தேர்களிலும், வாயிற் கதவுகளிலும் மரச்சிற்பங்களாகவும் காணப்படுகின்றன.

குறிப்பாகத் தமிழகத்தைப் பொறுத்த மட்டில் இராமாயணக் காட்சிகள் பல்லவர் காலம் தொட்டு கோயில்களிலே புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. பிற்காலங்களில் இராமாயணக் காட்சிகளோடு பாகவதக் காட்சிகளும் வண்ண ஓவியங் களாகக் கோயில்களின் விதானங்களில் அழகுறத் தீட்டப்பட்டு இருக்கின்றன. மேலும் திருத்தொண்டர் புராணக் காட்சிகள் கந்தபுராணக் காட்சிகள், சிவபெருமானின் திருவிளையாடல் காட்சி கள் ஆகியவைகளும் ஓவியங்களாக வரையப்பட்டு இருக்கின்றன. அத்துடன் சமண சமயத்தைச் சார்ந்த சில காட்சிகளும், தீர்த்தங்கரர் களின் வரலாறுகளும் முறையே பல்லவர் கால குடைவரைக் கோயில் களிலும், பிற்காலச் சமண சமயக் கோயில்களிலும் காணப் படுகின்றன. எனவே தமிழகத்து மக்கள் இதிகாசங்களின் கருத்துக் கள் மீதும் புராணங்களின் கருத்துக்கள் மீதும் கொண்டிருந்த பற்றும், பாசமும் இவற்றின் மூலம் நன்கு வெளிப்படுகிறது.

பெரும் அரண்மனையை எடுப்பித்து வாழ்ந்து வந்த அரச குடும்பத்தினரும் தங்கள் அரண்மனையிலேயே ஒரு பகுதியில் இராமாயணம் மற்றும் பாகவதக் காட்சிகளை ஓவியங்களாகத் தீட்டி உவகை அடைந்திருக்கிறார்கள். அவ்வாறு தீட்டப்பட்டுள்ள ஓவியங்களிலேயே இன்றும் அழகோடும், பொலிவோடும் காட்சி தரும் வண்ண ஓவியங்களை, இராமநாதபுரத்தை ஆட்சி செய்த சேதுபதி மன்னர்களால் கட்டப்பட்ட இராமலிங்க விலாசத்தில் காணலாம். இவ்வரண்மனை தமிழ்நாடு அரசால் பாதுகாக்கப்பட்ட சின்னம் என்று அறிவிக்கப்பட்டு, இத்துறையால் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது. இங்கு காணப்படும் இராமாயணம் மற்றும் பாகவத ஓவியங்களில் குறிக்கப்பட்டிருக்கின்ற குறிப்புக்களின் தொகுப்பே இந்நூல் ஆகும். இதில் சிற்சில குறிப்புக்கள் வழக்கமான கதைக்குச் சிறிது மாறுபாடானதாகவும் உள்ளன. இருப்பினும் அவ்வோவியங் களின் கீழே என்ன குறிக்கப்பட்டுள்ளது என்பதைப் பொதுமக்களும், ஆராய்ச்சியாளர்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் இந்நூல் வெளிக் கொணரப் பட்டுள்ளது. இதனை அறிஞர்களும், பொதுமக்களும் வரவேற்பார் கள் என்று நம்புகிறோம்.

இராமலிங்கவிலாசத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற இத்துறை அகழ்வைப்பகத்தில் காப்பாட்சியராகப் பணியாற்றிய திரு. கருணானந்தன் அவர்களால் இக்குறிப்புக்கள் சேகரிக்கப்பட்டு உரிய வரலாற்றுக் குறிப்புக்களுடன் எழுதப் பெற்றுள்ளது. இக்குறிப்புக் களில் காணப்படும் இராமாயணக் கதை மற்ற இராமாயணக் கதைகளி லிருந்து எந்தெந்த வகையில் ஒற்றுமையுடையது என்றும், எந்தெந்த வகையில் வேற்றுமைப்படுகிறது என்றும் தெரிந்து கொள்வதற்குப் பயன்படும் என்று கருதுகிறேன். நல்ல முயற்சி எடுத்து அக்குறிப்புக் களை எல்லாம் திரட்டி அழகிய நூலாக ஆக்கியுள்ள திரு. கருணானந்தன் அவர்களைப் பாராட்டுகிறேன். இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த இத்துறையின் அச்சுப்பிரிவினர் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

**நடன. காசிநாதன்**
இயக்குநர்,

# இராமாயண ஓவியக் குறிப்புகள்

சேதுபதிகள் இராமாயணக் கதையோடு ஒரு வகையில் தொடர் புடையவர்கள். இராமன் வழிபட்ட ஈச்சுரர் இருக்கும் இராமேச் வரம் இவர்கள் ஆட்சிப் பகுதியில்தான் உள்ளது. சேதுபதி என்ற பெயரும் இவர்களை இராமாயண நிகழ்ச்சியோடு இணைக்கிறது. இராமன் சேதுவைக் கட்டி அதைப் பராமரிக்கும் பொறுப்பை இவர் களுக்கு வழங்கி சேதுபதி என்று முடிசூட்டி விட்டுச் சென்றான் என்பது செவிவழிச் செய்தி. இராம கதையோடு தொடர்புடைய இவர்கள் தம்முடைய நாளோலக்க மாளிகைக்கு இராமலிங்க விலாசம் என்று பெயர் சூட்டியுள்ளனர். சேதுபதிகள் இராம கதையைக் கேட்பதில் ஆர்வம் கொண்டு விளங்கினர். நாயக்க அரசர்களோடு தொடர்பு கொண்ட சேதுபதிகள் தெலுங்கையும் அறிந்திருந்தனர். இராமலிங்க விலாசம் ஓவியங்களை வரையச் செய்த முத்துவிசைய இரகுனாத சேதுபதி என்பவர் தெலுங்குப் புலவர் ஒருவரிடம் தெலுங்கு ராமாயணத்தைக் கேட்பது போல ஓவியம் ஒன்று இராமலிங்க விலாசத்தில் காணப்படுகிறது.

இராமாயணத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட முத்துவிசைய இரகுனாத சேதுபதி இராமலிங்க விலாசத்தின் கருவறையில் [இன்றைய பெயர் இராமர் பீடம்] இராமாயண ஓவியங்களை விளக்கங்களுடன் வரையச் செய்துள்ளார். ஒவ்வொரு ஓவியத்தைப் பற்றிய விளக்கக் குறிப்புகள் ஓவியத்தின் மேல் பகுதி அல்லது கீழ்ப் பகுதியில் கருப்பு வண்ணம் தீட்டப் பெற்று அதன் மேல் வெள்ளை வண்ணத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் காவி வண்ணத்திலும் எழுதப் பட்டுள்ளன. காவி வண்ண எழுத்துக்களை விட வெள்ளை வண்ண எழுத்துக்களைத் தெளிவாகப் படிக்கலாம்.

விளக்கக் குறிப்புகள் முற்றுப் புள்ளி முதலியன வைக்கப் பெறாமல் தொடர்ச்சியாக எழுதப்பட்டுள்ளன. என்றாலும் இறுதி

வாக்கியத்தின் முடிவில் சில அடையாளக் குறிகள் இடப்பட்டுள்ளன. இவை தற்போதைய அரைப் புள்ளியின் பயனைக் கருதி வைக்கப்பட்டவையாய் இருக்கலாம்.

இக்குறிப்புகளை ஒருவரே எழுதாமல் பலர் எழுதியுள்ளனர் என்பதை எழுத்துக்களின் வரிவடிவ அமைப்பைக் கொண்டும், சில சொற்களின் அமைப்பைக் கொண்டும் அறிய முடிகிறது. எடுத்துக் காட்டாக ஒரு ஓவியர் லச்சுமணர் என்றும், இன்னொரு ஓவியர் லட்சுமணர் என்றும், மற்றொரு ஓவியர் லட்சுமணப் பெருமாள் என்றும் எழுதியுள்ளதைக் குறிப்பிடலாம். பெரும்பாலான வடமொழிச் சொற்கள் வரும் இடங்களில் அவ்வோசைக்கு ஏற்ற தமிழ் வரிவடிவையே பயன்படுத்தியுள்ளனர். [சான்று: ஆச்சிரமம், தானம், நமக்காரம், சுலோபம், பற்சி, சரசுவதி, ராச்சியம், சந்தோசம்]

இராமகதை தொடங்குகின்ற சில இடங்களில் தமிழ் விளக்கங் களுடன் அதற்கு ஏற்ற தெலுங்கு மொழி விளக்கங்களும் தெலுங்கு வரிவடிவில் கொடுக்கப்பட்டுள்ளன. 11-ஆம் ஓவியத்தில் குசலவர்க்கு வால்மீகர் இராம கதையைச் சொல்லித் தருகின்றார், அவர் சொல்லித் தரும் ஏட்டுச் சுவடியில் தெலுங்கு எழுத்துக்கள் காணப்படுகின்றன. எனவே வால்மீகர் சொல்லித் தரும் இராமாயணம் தெலுங்கு இராமாயணம் என்று கொண்டுள்ளனர். வரையப்பட்டிருக்கும் ஓவியங்களும் குறிப்புகளும் சில இடங்களில் வான்மீக இராமாயணத் தினின்றும், கம்ப இராமாயணத்தினின்றும் வேறுபடுவதால் இவ் வோவியங்கள் தெலுங்கு இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டவை என்று எண்ணத் தோன்றுகிறது.

ஓவியம் வரைவதற்கு முன்பே இந்த இந்த ஓவியங்களுக்கு விளக்கக் குறிப்புகள் எழுத வேண்டும் என்று திட்டம் தீட்டி எழுதி வைக்காமல், ஓவியம் வரையப்பட்ட பின்பு இப்படித்தான் ஓவிய விளக்கங்களை எழுதியிருக்க வேண்டும். ஓவியர்கள் இங்கு ஓவியத்திற்கே முக்கியத்துவம் கொடுத்தமையால் ஓவிய விளக்கங் களில் அதிக கவனம் செலுத்தத் தவறினர் எனலாம்.

**பேச்சு வழக்கு நடை**

ஓவியக் குறிப்புகள் பெரும்பாலும் பேச்சு மொழி நடையிலேயே உள்ளன. இன்றைய சிறுகதை, புதின எழுத்தாளர்கள் பேச்சு நடையில் எழுதுவதை இயல்பு என்று நினைப்பதைப் போல அவர்களும் நினைத்து இவ்வாறு எழுதியிருக்க வேண்டும். இராமாயண ஓவிய விளக்கங்களில் எழுத்துகள், சொற்கள், சொற்றொடர்கள் பேச்சு நடையைப் பின்பற்றி எத்தகைய மாற்றங்களைப் பெற்றுள்ளன என்பதைக் கீழ்க்கண்ட பட்டியல்கள் காட்டும்.

1) 'த்', ச் என மாற்றம் பெறுதல்.
படித்து — படிச்சு 12*
பசித்து — பசிச்சு 22
ஒடித்தால் — ஒடிச்சால் 120

2) 'ற்', த் என மாற்றம் பெறுதல்.
குதிரையேற்றம் — குதிரையேத்தம் 72
யானையேற்றம் — யானையேத்தம் 73
நிறைவேற்றி — நிறைவேத்தி 101

3) 'உ', ஒ என மாற்றம் பெறுதல்.
உடன்படிக்கை — ஒடம்படிக்கை 20
உபசாரம் — ஒபசாரம் 22

4) 'ஒ', உ என மாற்றம் பெறுதல்
கொடுத்தது — குடுத்தது 12, 26, 40, 41, 42

5) 'இ', எ என மாற்றம் பெறுதல்
விளையாடல் — வெளையாடல் 60

6) 'உ' இ என மாற்றம் பெறுதல்.
அந்தப்படிக்கு — அந்தப்படிக்கி 9, 33
அரண்மனைக்கு — அரமனைக்கி 81, 113
புறப்பட்டது — பிறப்பட்டது 5, 7, 133, 148

7) 'அ' இ என மாறுதல்
அதன் பிறகு — அதின் பிரகு 100

---

* ஓவியங்களுக்குக் கட்டுரை ஆசிரியர் இட்ட எண்கள்.

## இராமாயண ஓவியக் கதைச் சுருக்கம்

*வான்மீகர் ஆசிரமத்தில் இருக்கிறார். அங்கு வந்த நாரதரிடம் புண்ணிய கதை ஒன்று கூறுக என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க, வான்மீகருக்கு இராம காதையை நாரதர் கூறிச் சென்றார். நாரதர் சென்றவுடன் நீராடச் சென்ற வான்மீகர், பெண் பறவை தவிக்குமாறு ஆண் பறவையைக் கொன்ற வேடன் ஒருவனைச் சபித்தார். சபித்த தன் வாசகங்கள் ஒரு பாடல் போல் இருப்பதை அறிந்து, பரத்துவாசரிடத்திலே அப்பாடலைச் சொல்லி ஆச்சிரியப்பட்டார். பின்னர் ஒரு நாள் ஆசிரமத்திற்கு வந்த பிரம்ம தேவனிடத்திலே மேற்படி விவரங்களை வான்மீகர் கூற கலைமகள் அருள் உங்களுக்குக் கிட்டியுள்ளது. எனவே இராமன் கதையைக் காவியமாகப் பாடுக என்று கூறிச் சென்றார். வான்மீகர் தாம் இயற்றிய இராம காவியத்தைக் குசலவர் இருவர்க்கும் உபதேசம் செய்து, அக்காவியத்தை அவ்விருவர் மூலமாக இராமனுடைய அவையிலே அரங்கேற்றம் செய்கிறார்.*[1]

*அயோத்தியா பட்டணத்தை ஆண்டு வரும் தசரதர் தமக்குப் பிள்ளை இல்லையே என்று வருந்தினார். சுமந்திரன் என்னும் மந்திரி கலைக்கோட்டு முனிவருடைய வரலாற்றைக் கூறி அவரை யாகம் வளர்க்க அழைக்குமாறு கூறினான். ரோமபத ராசா நாட்டிலிருந்து வருகை புரிந்த கலைக்கோட்டு மாமுனிவர் புத்திரகாமேட்டி யாகம் வளர்க்கிறார். யாகத்திலிருந்து வெளிப்பட்ட பூதம் கொடுத்த பிண்டத்தை மூன்றாகப் பிரித்துக் கோசலை, கைகேயி, சுமித்திரை மூவர்க்கும் தசரதர் வழங்குகிறார். எஞ்சியவற்றையும் சுமித்திரை சாப்பிடுகிறாள். இதன் பலனாக இராமன், பரதன், இலக்குவன், சத்துருக்நன் என நான்கு மக்கள் பிறக்கின்றனர்.*

*நால்வரும் தளர் நடை பயின்று வளர்ந்து வசிட்டரிடம் கல்வி கற்று வரும் நாளிலே விசுவாமித்திரர் தசரதர் அவைக்கு வருகிறார். இராமனைத் தன்னோடு அனுப்பி வைக்குமாறு கேட்டு இராம இலக்குவரை விசுவாமித்திரர் அழைத்துச் சென்றார். மூவரும்*

காமா ஆச்சிரமம், சரயு நதி முதலியன தாண்டி, யாக சாலை அடைகின்றனர். அங்கே தாடகை வதம் நடந்தவுடன் விசுவாமித்திரர் வேள்வியைத் தொடங்கினார். வேள்வியைக் காத்து நிற்கும் இராம இலக்குவர், அதனை அழிக்க வரும் தாடகையின் மக்கள் மாரீசன், சுபாகு ஆகியோரை விரட்டியடிக்கின்றனர். இவர்களுள் சுபாகு மாள்கிறான், மாரீசன் ஓடிப்போகிறான்.

யாகம் மிகச் சிறப்பாக நடந்து முடியவே, மூவரும் விசாலப் பட்டணம் தாண்டி மிதிலை நோக்கி வருகின்றனர். வழியில் அகலிகை விமோசனம் நடைபெறுகிறது. மூவரையும் எதிர் கொண்டு அழைத்த மிதிலை அரசர் சனகர், சீதையை மடிமேல் வைத்துக் கொண்டு "ஒரு வில்லுயிருக்கிறது அதனை இராம இலக்குவர் ஒடித்தால் சீதையைத் திருமணம் செய்து கொடுப்பேன்" என்றார்.

நூறாயிரங்கோடி கின்னரர் வில்லை இரதத்தில் வைத்து எடுத்து வருகின்றனர். இராமன் அந்த யீசுர வில்லை எளிதாக முறிக்கிறான். "சீதையை ராமனுக்கு மணம் முடித்துத் தருவேன்" என்று சனகர் தேங்காய் தொட்டுக் கொடுக்கிறார். திருமணத்திற்காகத் தசரதன், குசத்துவசன், கேகைய அரசன் முதலியோர் மிதிலை வந்து சேர்கின்றனர். திருமணச் சடங்குகள் நடந்த பின்னர் இராம லக்குவர் பரத சத்துருக்நர் முறையே சீதை, ஊர்மிளை, மாண்டபத்தினி, சதகீர்த்தி முதலிய நால்வரையும் கைத்தலம் பற்றினர்.

இராமாயண ஓவிய வரைவுகள் பாலகாண்டத்தோடு நிறைவு பெறுகின்றன. இன்னும் சொல்லப் போனால் பாலகாண்டத்திலும், புயலடிக்கும் பரசுராமப் படலம் வராமலேயே கடிமணப் படலத்துடன் இராமாயண ஓவியங்கள் நிறைவு பெறுகின்றன. இராமனுடைய வாழ்க்கையில் கடிமணப் படலத்திற்குப் பின்னால் வரும் படலங்கள் பெரும்பாலும் சோக மயமானவையே. சோக இழையோடும் அப் படலங்கள் காட்சிகளாய் இராமலிங்க விலாசத்தில் இருக்கக் கூடாது என்னும் நோக்கில் அவை தவிர்க்கப்பட்டிருக்கலாம். வரைவதற்குப் போதிய இடம் இல்லாமையும் ஒரு காரணமாகலாம்.

## இலக்கிய ஒப்பு நோக்கு

காவியங்களோடு குறிப்பாகக் கம்பராமாயணத்தோடு ஓவியங்கள் எவ்வளவு மாறுபடுகின்றன அல்லது இயைகின்றன என்பதை இப்பகுதி விளக்கும்.

### 1 சுமந்திரன் யோசனை

60,000 ஆண்டுகள் தசரதன் நாட்டை மாண்புற ஆள்கின்றான். ஆனாலும் தன் வாரீசாகப் பிள்ளை இல்லையே என்னும் வருத்தம் அவனுள் எழுகிறது. அப்போது குலக்குரு வசிட்டர் என்பவர் "கலைக் கோட்டு முனிவர் வந்து வேள்வி செய்தால் தனயர்கள் உண்டு" என்று மொழிகின்றார். இது கம்பர் தரும் இராமாயணம் [திருஅவதாரப் படலம் - பாந்தளின் - 212].[2] ஆனால் ஓவியம் இவ்யோசனையை அமைச்சர் சுமந்திரன் கூறுவதாகக் காட்டுகிறது. பிள்ளை இல்லையே என்று வருத்தப்பட்ட தசரதனிடம் அமைச்சர் சுமந்திரன் தான் சனத்குமாரரிடம் முன்பு கேட்ட கலைக்கோட்டு முனிவருடைய வரலாற்றைக் கூறி அம்முனிவர் வந்து புத்திர காமேட்டி யாகம் செய்தால் குழந்தை பிறக்கும் என்று யோசனை கூறுவதாக உள்ளது [ஓவிய எண்கள்: 16, 17, 28].

### 2 கலைக்கோட்டு முனிவரை அழைத்து வரல், பல்லக்கு உருவமாக மாறி எடுத்து வருதல்

உரோமபதன் நாட்டில் மழையின்றிப் பெருவறட்சி ஏற்பட்டது. ஒரு கலை (மான்) முகச் சிருங்க உயர் தவன் வந்தால் மழை பெய்யும் என்று உரோமபதன் அறிகிறான். அவரை அழைக்கச் சோதி நுதல்-கருநெடுங்கண் - துவர் இதழ்வாய்-மென் கொங்கையர் செல்கின்றனர். திருந்து இழையவர் வருக்கை, வாழை, பலா முதலிய இன்கனிகளை முனிவர்க்குக் கொடுத்துச் சில நாட்கள் அவரோடு தங்குகின்றனர். பின்னர் அம்மடந்தையர் தம் இடத்திற்கு முனிவரை வருதல் வேண்டும் என்று கேட்டுக் கொண்டபடி அவர்களோடு முனிவர் ஏகினார் என்கிறார் கம்பர் [திருஅவதாரப் படலம்-இன்னை-225].

நம்முடைய ஓவியர்கள் உள்ளத்தில் இந்த இடத்தில் புதியதோர் கற்பனைச் சித்திரம் எழுகிறது. தமக்கு இன்கனிகள் முதலியன கொடுத்துப் பல நாட்கள் தன்னுடன் தங்கிய வேசியருடன் உரோமபதன் நாட்டுக்கு வர முனிவர் உடன்படுகின்றார். மழையைப் பெய்விக்கும் ஆற்றலுடைய முனிவர் பாதம் நோக நடந்து வர இயலுமா? வேசியரோ தம்முடன் பல்லக்கை எடுத்துச் செல்ல மறந்து விட்டிருந்தனர். எனவே வேசியர் இருவர் பல்லக்கு உருவமாகக் கால்களைப் பின்னிக் கொள்கின்றனர். அவ்விருவரின் கைகளைப் பல்லக்கின் பிடிகளாக மற்ற வேசியர் பிடித்துக் கொள்கின்றனர். இத்தகைய பெண் பல்லக்கில் அமர்ந்து கொண்ட கலைக்கோட்டு முனிவர் கீழே விழாதிருக்கும் பொருட்டு பல்லக்கு உருவமாக இருக்கும் வேசி ஒருத்தியின் மார்பகத்தைப் பற்றிக் கொள்கிறார் [ஓவிய எண் 23].

கலைக்கோட்டு முனிவரின் வரலாற்றை அறிந்த தசரதன் முனிவரைத் தம் நாட்டிற்கு அழைக்க உரோமபதன் நாட்டிற்குச் செல்கிறான். எதிர்கொண்டு வரவேற்ற உரோமபதன் தசரதனை முன்னம் அயோத்திக்கு அனுப்பி விட்டுப் பின்னர் முனிவரை அவர் மனைவி சாந்தையோடு தசரதன் நாட்டுக்கு அழைத்துச் செல்கிறான் என்கிறார் கம்பர் [திரு அவதாரப் படலம்: 243, 244]. ஆனால், உரோமபதன் நாட்டுக்குச் சென்ற தசரதன் தன்னுடனேயே கலைக்கோட்டு முனிவரை அயோத்திக்கு அழைத்து வருவதாக ஓவியம் வரையப்பட்டுள்ளது [ஓவிய எண்: 33].

## 3 திருமால் தேவர்களின் செவிக்கு விருந்தாகச் சொன்னது

தசரதன் தனக்குப் பிள்ளையில்லை என்ற ஏக்கத்தைத் தெரிவித்தவுடன் முன்னொரு நாளில் திருமால் தேவர்களிடம் "அரக்கர்கள் கொடுமையை ஒழிக்க இராமாவதாரம் எடுப்பேன்" என்று கூறியிருந்ததை வசிட்டர் நினைவு கூர்வதாகக் கம்பர் அமைத்திருக்கிறார் [திரு அவதாரப் படலம் - மசரதம்-200]. ஆனால், இங்கு ஓவியத்தில் கலைக்கோட்டு முனிவரால் புத்திரகாமேட்டி யாகம் நடைபெறுகிற அதே சமயத்தில் சிவன், பிரமன், தெய்வேந்திரன்

முதலிய தேவர்கள் வைகுண்டத்திற்கு வந்து திருமாலை வணங்கி "பூலோகத்திலே ராட்சதர் உபத்திரம் மெத்த" வென்று கூறுகின்றனர். அப்போது திருமால் தேவர்களின் செவிக்கு விருந்தாக 'இராமாவதாரம் எடுக்கப்போகிறேன்' என்ற செய்தியைச் சொல்வதாக அமைக்கப்பட்டுள்ளது [ஓவிய எண்: 36, 37].

## 4 அக்கினி தோன்றிப் பிண்டம் கொடுத்தல்

புத்திரகாமேட்டி யாகம் 12 திங்கள் வரை நடைபெறுகிறது. யாகத்தின் இறுதியில் நெருப்பிலிருந்து சிவந்த கண்ணுடைய பூதம் ஒன்று தோன்றிப் பொன் தட்டினில் சுதையை ஒத்த பிண்டம் ஒன்றை வழங்கி விட்டு மறைகிறது [திரு அவதாரப் - படலம் - ஆயிடை 265]. ஆனால் வேள்வி நெருப்பில் அக்கனி தேவனே தோன்றிப் பிண்டம் கொடுத்துச் செல்வதாக ஓவியம் உள்ளது [ஓவிய எண்: 39].

## 5 விசுவாமித்திரர் வருகை

அவையில் இருக்கும் தசரதன் முன்பு திடுமென விசுவாமித்திரர் தோன்றுவதாக இலக்கியம் கூறுகிறது. இது மாமுனிவர் தம் பெருமைக்கு அழகல்ல என்று நினைத்த ஓவியர்கள், வருகை புரியும் விசுவாமித்திரர் முன்னே போய்க் காலில் விழுந்து வணங்கி, அரண்மனைக்கு முனிவரை தசரதர் அழைத்து வருவதாகப் பெருமை சேர்த்துள்ளனர் [ஓவிய எண்: 79]. மேலும் கம்பருக்கு மாறுபாடாக தசரதன் இராமனை உடன் அனுப்ப மறுத்ததால் விசுவாமித்திரர் கோபித்துக் கொண்டு வெளியே செல்ல, வசிட்டர் அறிவுரைப்படி தசரதன் திரும்பவும் விசுவாமித்திரரிடம் சென்று காலில் விழுந்து வணங்கி மீண்டும் அரண்மனைக்கு அழைத்து வருவதாக அமைக்கப் பட்டுள்ளது [ஓவிய எண்: 79 81]. இந்நிகழ்ச்சி விசுவாமித்திரருடைய குண நலத்தை ஒருபடி மேலே சென்று விளக்குவதாய் அமைந்துள்ளது. மேலும் விசுவாமித்திரர் கோபித்துக் கொண்டு அரண்மனையை விட்டு வெளியே சென்றதால் உயிரினும் இனிய இராமனை அவருடன் அனுப்பத் துணியாத தசரதனின் இராம ஈடுபாட்டைத் தெளிவாக்குகிறது.

## 6 அகலியை விமோசனம்

பிரச்சனைகளை மனித அபிமானத்தோடு அணுகிப் பன்னெடுங் காலத்திற்கு முன்னரே தீர்வு கண்டனர் என்பதற்கு மிகச் சிறந்த தோர் எடுத்துக் காட்டு அகலியை சாப விமோசனம். வந்திருப்பவன் இந்திரன் என்று அறிந்தும் இணங்கிய அகலிகையைக் கௌதமர் "நீ இங்கே நீண்ட காலம் காற்றே உணவாக ஏதொரு ஆகாரமுமின்றிச் சாம்பல் மேல் படுத்து யார் கண்ணுக்கும் தெரியாமல் மறைந்து வசிப்பாயாக; இராமன் இந்த ஆசிரமத்தில் கால் வைக்கும்போது உன் பாவம் நீங்கும்" எனக் கூறி இமயம் சென்றார். இலைகளிலும் கொடிகளிலும் மறைந்து யாருக்கும் தெரியாமல் பல்லாண்டு விரதம் காத்து வந்த அகலியை இராமன் வருகையால் பாவம் தீர்ந்தாள். கௌதமரும் அச்சமயம் அங்கே வந்து சேர்ந்தார் என்றார் மூலநூல் ஆசிரியர் வான்மீகர்.[3]

எனவே அகலியை கல்லானாள் என்பது வான்மீகரின் கருத்து அல்ல. அகலியை கல்லானாள் என்று பத்மபுராணத்தில் கூறப் பட்டுள்ள கதையை ஒட்டியே கம்பனும் கல்லாய்க் கிடந்தாள் என்றனர்.[4] சிந்தையாலும் பிற மாதரைத் தொடாத பண்புடைய பேராண்மையாளன் இராமனுடைய பாதம் சாப விமோசனத் திற்காக அகலியைக் கல்லில் பட வேண்டுமா என்று சிந்தித்த கம்பன் இராமனுடைய பாதத்தூசி பட்டவுடன் அகலியை உருப்பெற்றாள் என்று தமிழ்ப் பண்பாடாய்த் தெளிவித்தான். விசுவாமித்திரரோ அந்நேரம் பெருந்தகையே உன் கைவண்ணம் அங்குக் கண்டேன் கால் வண்ணம் இங்குக் கண்டேன் என்று மெய்மறந்து வியந்தார் [அகலியைப் படலம்-555, 557].

இவை இவ்வாறாக, இராமலிங்க விலாசத்து ஓவியர்கள் விமோசனத்தை எவ்வாறு வழங்கியுள்ளனர் என்று பார்ப்போம். கம்பரைப் பின்பற்றியே கல் ஒன்று வரையப்பட்டுள்ளது. மழை வண்ணத்து அண்ணலின் பாதம் அக்கல்லில் பட்டவுடன், கல் பெண் உருவாக மாறுகிறது. கரிய செம்மல், ஒரு பெண்ணின் மீதல்லவா நம் பாதம் பட்டு விட்டது என்று மயங்குகிறான். "அறியாமல் பாதத்தை வைத்து விட்டேன் அன்னையே" என்று சொல்லி

அகலிகையை இராமன் வணங்குகிறான். "அறிந்தும் அறியாதவர் போல் வாழ்வளித்த வள்ளலே உன்னை நானன்றோ வணங்குதல் வேண்டும்" என்றுஅகலி [அகிலி என்றே எழுதப்பட்டுள்ளது] அண்ணலைத் திரும்ப வணங்குகின்றாள். 'அறியாமல் வச்சமென்று' இராமனைக் கும்பிட வைத்து நகைச் சுவையை இழையோட விட்டு இக்காட்சியை ஓவியர் அமைத்துள்ளனர் [ஓவிய எண்: 107, 108].

## 7 வில்லெடுத்து வருதலும், ஒடித்தலும்

இராம இலக்குவர் விசுவாமித்திரர் மூவரும் மிதிலை சென்றடைந்தனர். கன்னி மாடத்தில் இராமன் சீதையைக் காண்கின்றான். பாற்கடலில் பிரிந்த காதலர் இருவரும் ஒருவர் மாறி ஒருவர் நெஞ்சில் குடிபோகின்றனர். கற்புக்கு முன்னர் களவு என்னும் அக இலக்கண மரபைப் பின்பற்றிக் கம்பர் இவ்வாறு அமைத்தார். மூவரையும் உபசரித்து, இருவரும் தசரதன் மக்கள் என்றும், வில்லைக் காண வந்துள்ளனர் என்றும் அறிந்து மகிழ்கிறார் சனகர். இவர்கள் அந்த சிவ தனுசை ஒடித்தால் என் துன்பம் நீங்கி சீதையின் திருமணம் நடைபெறும் என்று கூறி - ஏவலரிடம் அவ்வில்லை எடுத்து வருமாறு சனகர் ஏவுகிறார். யானையை ஒத்த மேனியர், கல் எனத் திரண்ட தோளினர் அறுபதினாயிரவர் அவ்வில்லைத் தூக்கி வருகின்றனர். அவ்வில்லைக் கண்டவர்கள் மேருவை வளைத்துச் செய்ததோ, வான வில் தான் வில்லாகக் கீழே விழுந்து விட்டதோ என்று வியக்கின்றனர். சுமை ஆற்றாமையால் இடையிடையே வில்லைத் தண்டில் தாங்கிக் கொள்கின்றனர். இவ்வாறு வந்து சேர்ந்த அவ்வில்லை இராமன் சீதைக்குச் சூட்டும் மணமாலை என எளிதாக எடுத்தான். அடுத்து 'எடுத்தது கண்டார்; இற்றது கேட்டார்' என்று காவியம் படைத்துள்ளார் கம்பர். அதே சமயத்தில் சீதை, வில்லை முறித்தவன் என் நெஞ்சங் கவர்ந்த தோன்றல் அல்லனேல் இறப்பேன் எனத் துணிகின்றாள்[5] [கார்முகப் படலம் - கம்பர்].

ஓவியர்கள் இந்த அழகிய சித்திரத்தின் அடிப்படையை அடியோடு மாற்றியுள்ளனர். விசுவாமித்திரர் மூலமாக தசரதன் குமாரர் என அறிந்த சனகர் வில்லெடுத்து வர ஏவுகாரரை ஏவுகின்றார்.

சீதையைத் தன் மடிமேல் வைத்துக் கொண்டு என்னிடம் ''ஈசுரன் கொடுத்த ஒரு வில்லுயிருக்கிறது. அதை ராம லட்சுமணர் ஒடித்தால் சீதையைக் கட்டி தருவேன்'' என்று சொல்ல, இராம இலக்குவர்'' நல்லது ஒடிக்கிறோம்'' என்று கூறுகின்றனர் [ஓ. எ. 120]. இறக்கையுடைய நூறாயிரங்கோடி கின்னரர் அவ்வில்லைத் தேர் மீது வைத்துத் தள்ளிக் கொண்டும், இழுத்துக் கொண்டும் வருகின்றனர். சனகரின் மடிமீது சீதை இருக்க, இராமன் தேரிலிருந்து வில்லை எடுத்து முறிக்கிறான். 'சீதையை இராமனுக்குத் தருகிறேன் என்று சொல்லித் தேங்காய் தொட்டுக் கொடுத்தார்' சனகர். ஓவியர்கள் கன்னி மாடத்துக் கண்ணொடு கண்ணிணை நோக்கு ஒக்குதலையும் தவிர்த்து, வில்லை முறித்தவன் தன் நெஞ்சங் கவர்ந்த கள்வனோ அல்லனோ எனச் சீதையின் அலை பாயும் உள்ளத்தையும் தவிர்த்து, இராமன் வில்லை ஒடிக்கும் நிகழ்ச்சியைச் சீதைக்கு முன்பாகவே நடத்திக் காட்டி யிருக்கின்றனர் [ஓ. எண். 119 127].

## 8 இராம, இலக்குவ, பரத, சத்துருக்நர் திருமணங்கள்

காவியங்கள் இராமனுடைய திருமணத்தை மட்டுமே பெரிது படுத்திச் சிறப்பிக்கின்றன. இராமனைத் தவிர்த்த ஏனைய மூவரும் சனகர் தம்பி குசத்துவசன் பெண்களை இராமனுக்குத் திருமணம் நிகழ்ந்த பங்குனி உத்திரத்தன்றே திருமணம் செய்து கொண்டனர் என்பதை இரண்டே பாடல்களில் முடித்து விடுகிறார் கம்பர் [கடிமணப் படலம் 1344-45]. ஆனால் ஓவியர்கள் இராம, பரத, இலக்குவ, சத்துருக்நன் என நால்வரின் திருமணத்திற்கும் சம உரிமை வழங்கியுள்ளனர். 'இராமர், பரதர், லச்சுமணர், சத்துருக்நர் நால்வர்க்கும் மணக்கோலம் செய்யப்படுகிறது [146]'. சீதை, மாண்டபத்தினி, ஊர்மிளை, சதகீர்த்தி என நால்வரும் திருமணம் இனிது நடைபெறுவதற்காகப் பார்வதி அம்மனை வழிபடுகின்றனர் [ஓ. எ. 147]. பெண்கள் நால்வருக்கும் எண்ணெய் தேய்த்தல், நலுங்கு செய்தல், காப்புத் தரித்தல் போன்ற சடங்குகள் செய்யப்படுகின்றன. இராமன் முதலிய நால்வரும் காப்புத் தரித்து யானை மேல் தனித் தனியாக ஊர்வலம் வருகின்றனர் [153-160]. (பரதன் தேர் செலுத்த இலக்குவ சத்துருக்நர் கவரி வீச, இராமன் மணமேடைக்குத் தேரில்

சென்றான் என்கிறார் கம்பர்) பிரமதேவனும் சகலவிதமான தேவர்களும் சத்திரிஷியளும் வந்திருக்க அக்கினி முன்பாக இராமன் சீதையைத் திருக்கலியாணம் செய்து கொள்கிறான். இதே போல் ஏனைய பரதர், இலக்குவர், சத்துருக்நர் திருமணங்களும் தனித்தனி ஓவியங்களில் காட்டப்பெற்று இராமாயணப் பாலகாண்ட ஓவியங்கள் முற்றுப்பெறுகின்றன.

**சில செய்திகள்**

**தேவர்கள் இராமனுடன் பேசிச் செல்லுதல்**

1 இராமன் தாடகையை வதம் செய்த போதும்; சுபாகு, மாரீசனிடமிருந்து வேள்வியைக் காத்த போதும்; இந்திரன் முதலிய தேவர்கள் வானத்தில் தோன்றி பூ மழை பொழிந்து வாழ்த்திச் சென்றதாகக் காவியம் கூறுகிறது. ஆனால் சிவன் முதலிய தேவர்கள் நேரில் வந்து கதைத் தலைவன் இராமனிடம் உரையாடிச் சென்றதாகக் காவியத்தில் [பாலகாண்டத்தில்] இல்லை. ஆனால் இராமலிங்க விலாசத்து ஓவியத்தில் தாடகை வதை முடிந்தவுடன் தேவர்கள் நேரில் தோன்றி இராமனுடன் உரையாடிச் செல்வதாகக் காணமுடிகிறது. இராமசுவாமியைத் தேவர்கள் வந்து கண்டு பேசிக் கொண்டு போந்து [95] என்று எழுதியதோடன்றி சிவன், பிரம்மா, இந்திரன் முதலியோர் இராமனுடன் உரையாடுவதாகவும் வரையப்பட்டுள்ளது.

2 பாகவத ஓவியம், இராமாயண ஓவியம் இரண்டிலும் தேவர்கள்கூடி ஆலோசனை செய்த பின்னர் அவதாரங்கள் நிகழ்வதாய் வரையப்பட்டுள்ளன.

3 நதியில் நீராடுவது போல் வரும் ஓவியங்களில் அலை அலையாகக் காட்டப்பட்டு அவற்றுக்கிடையில் மீன்கள், நண்டு முதலியன இருப்பது போல் காட்டப்பட்டுள்ளன.

4 சுவாகு கடலில் சென்று மாள்வதாகச் சொல்லப் பெறும் ஓவியத்துக்கு அருகில் கடல் காட்டப்பெற்று அதனுள் சுவாகு மூழ்குவது போல் வரையப்பட்டுள்ளது.

5 அம்பு பாய்ந்து தாடகை இறக்கும் காட்சியில் அவள் உடலிலிருந்து மற்றொரு உடல் கீழே சாய்வது போல் வரையப்பட்டுள்ளது.

## குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள்

6 கதை நிகழ்ச்சிகளை விட குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளுக்கு [பிள்ளைத்தமிழ் பாடுவதைப் போல] இவ்வோவியங்களை வரைவித்த சேதுபதி பெரும்பான்மை இடங்களை ஒதுக்கியுள்ளார் எனலாம். பிள்ளையைத் தொட்டிலாட்டினது [56]; பிள்ளையளை காது குத்தி கொண்டை போட்டது [57]; நால்வருக்கு தாயார் வந்து மொலை குடுத்தது [58]; இராம லக்குவ பரத சத்துருக்ந நால்வரும் தவழ்ந்து விளையாடையிலே வெண்ணை குடுத்தது [60, 61]; இராமசுவாமிக்கு சங்கோட பால் வார்த்தது [62]; பரதரை அம்மாலை போட்டு முத்தங் குடுத்தது [63]; இலச்சுமணரையும் சத்துருக்நரையும் கைபிடிச்சு நடப் பிச்சது [64]; கதையைக் கொஞ்சம் விரிவாகச் சொல்வதற்கு வசதியாக இக்குழந்தைப் பருவ ஓவியங்களைச் சுருக்கியிருந்திருக்கலாம். பாகவத ஓவியத்திலும் கண்ணனுடைய குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள் இதைப் போலவே எழுதப்பட்டுள்ளன.

7 இராமாயண, பாகவத ஓவியங்கள் இடப்புறம் தொடங்கி வலமாகச் சென்று முடிகின்றன. இது 'வலம் வருதல்' என்னும் கொள்கையைப் பின்பற்றியதாகலாம்.

8 ஓவியர்கள், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நிறத்தையே பயன்படுத்தியுள்ளனர். இராமனுக்கும் பரதனுக்கும் பச்சை நிறம், விசுவாமித்திரருக்குக் கறுப்பு நிறம், கலைக்கோட்டு மகரிஷிக்கு மஞ்சள் நிறம் என்று சில சான்றுகள் கூறலாம்.

அடிக்குறிப்புகள்

1 இராமன் முன்பு குசலவரி இராமாயணத்தை அரங்கேற்றம் செய்யும் ஓவியத்தை அடுத்து பாலகாண்டத்தின் முதற் காட்சி தொடங்குகிறது. எனவே குசலவர் கூற்றில் ஓவியங்கள் உள்ளன எனலாம்.

2 கம்பராமாயணப் பாடல் எண்கள் கு, அழகிரிசாமி அவர்கள் சக்தி காரியாலயம் மூலம் 1958-இல் பதிப்பித்த கம்பராமாயணம்-பாலகாண்டம் என்னும் நூலுக்கு உரியவை.

3 சக்கரவர்த்தித் திருமகன் - இராஜாஜி.

4 'காவ்ய இராமாயணம்' என்னும் நூற் கருத்து.

5 இரதத்தில் வந்த, இரும்புப் பெட்டிக்குள்ளிருந்த வில்லைத் திறந்து எடுத்து முறித்தான் என்பது வான்மீகம் - சக்கரவர்த்தித் திருமகன் - இராஜாஜி.

# ஓவியக் குறிப்பு

**மேற்குச் சுவர் இடப்புறம்**

1 ஸ்ரீமதுராமாயணம் "பாலகாண்டம்" வால்மிகரு ஆச்சிரமத்துக்கு நாரதர் வந்தவுடநே பூசை பண்ணி புண்ணிய கதை சொல்லச் சொல்லி கேட்டதுக்கு ராமசுவாமி புண்ணிய புருஷநென்று ராமாயணம் சொன்னது

2 வால்மீகர் சந்தாநத்துக்குப் புரப்பட்டது

3 வேடன் வாணத்தைக் கொண்டு பட்சியை யைதவிடம்[1]

4 வால்மீகர் சந்தாநத்துக்குப் போர வழியில் வாணத்திநாலே அடிபட்டிருக்குர நிரவுஞ்ச பட்சியினுட சத்திரி கிலேசப் படுகுரது கண்டு வேடனைப் பார்த்து சபித்தது

5 வேடனை சபித்து ஒரு சுலோபமாச்சுது என்று பரத்துவாச ரிடத்திலே சொல்லி ஆச்சிரியபட்டு தாநத்துக்கு பிரப்பட்டது

6 வால்மீகர் சரவி நதியிலே தானம் பண்ணிது

7 தாநம் பண்ணி ஆச்சிரமத்துக்கு பிரபட்டது

8 ஆச்சிரமத்திலிருந்து பரத்துவாசரிடத்திலே நாம சொன்ன சுலோபத்தை மரந்துவிடாதை என்று சொன்னது

9 வால்மீகர் ஆச்சரியப்பட்டு யிருக்கையிலே பிரமதேவன் வந்தார் பிரமதேவனைப் பார்த்து நமக்கரித்து முன் நாரதரை கண்டு ஒரு கதை சொல்ல சொன்னேன் அவர் ராமகதை சொல்லச் சொல்லி உபதேசம் பண்ணினார் அப்பால் ஒரு பற்சிக்காக[2] வேடனை சபித்தேன் அது ஒரு சுலோபமாச்சுது பிரமதேவன் அந்தப்படிக்கு சரசுவதி கிடாச்சித்து ராமகதை சொல்லச் சொல்லி வரங்குடுத்து ராமசுவாமி பூறுவகோத்திரமுஞ் சொன்னார்

10 பிரமதேவன் சொன்னபடிக்கு வால்மீகர் ராம கதை சொன்னது

11 ராம கதையை வால்மிகர் குசலவாள் ரண்டு பேருக்கும் உபதேசம் பண்ணினது[3]

12 வால்மிகர் குசலவருக்குத் தான் படிச்சுக் குடுத்த ராமாயணம் சத்திரிஷயளுக்கு ஞானம் பண்ணி விச்சது அதின்பேரிலே கதை கேட்டு சந்தோஷபட்டு கண்ட கோடாலி கபீன முதலானது குடுத்து வெகுமானம்

13 அயோத்தியா பட்டண(த்)திலே ராமசுவாமி சமுகத்தில் வால்மீகர் குசலவாளை அளைச்சு வந்து ராமாயண கதையை ஞானம் பண்ணி விச்சது அதின்பேரிலே சுவாமி வெகுமானம் பண்ணினது

14 அயோத்தியா பட்டணத்தில் தசரதமகாராசாவும் சுமந்திர பிறதாணியளுடனே ராச்சிய பாரம் பண்ணிக்கொண்டிருந்தது

15 [தசரதர் தமக்குப் பிள்ளை இல்லை என்று மந்திரி முதலானோரிடம் கூறும் ஓவியம்]

16 தசரத மகாராசாவை பாத்து சுமந்திரன் என்கிற மந்திரி தான் சனக்குமாரர்கள் கிட்ட பூறுவத்திலே கேட்ட கதை சொன்னது

17 சனகாதியள் சுமந்திரரைப் பாத்து திசரதனுக்குப் புத்திரனுண்டாகிறதுக்கு இனிமேல் நடக்கிற கதை சொன்னது

18 ரோமபாத ராச(ா) த(ன்)னுடைய ராச்சியக்குச் சரமந் தீர மளை (மழை) வரிஷிக்கிறதுக்கு கலைக்கோட்டு மகரிஷியைக் கூட்டி வர ஆலோசினை பிறதானியளுடனே சொல்லுகிறது

19 ரோமபாத ராசா கலைக்கோட்டு மகாரிஷியைக் கூ(ட்டி)வர வேசியஸ்ரீயளுக்கு வெகுமானம் பண்ணுகிறது

20 ரோமபாதா ராசா அனுப்பிவிச்ச வேசியர் ஸ்ரீயைள் கலைக் கோட்டு மகாரிஷி ஆசிறமத்துக்குப்போய் ஒடம்படிக்கை பண்(ணி) கூப்பிடுகிறது.

21 கலைக்கோட்டு மகரி(ஷி) வேசிய(ா) ஸ்ரீயளை தன்னுடைய ஆசிறமதிலளைச்சு(போய்) உபசாரம் பண்ணுகிறது

22 கலைக்கோட்டு மகாரிஷிக்கு வேசியஸ்ரீயள் கொண்டுவந்த பதாற்த்தம் பலகார முதலானது குடுத்து ஒபசாரம் பண்ணினது அது வாங்கி பச்சிச்சது

23 அங்க தேசப்பட(ட்)டணத்துக்கு கலைக்கோட்டு மகாரிசியை வரச் சொல்லி வேண்டிய உபசாரங்களெல்லாம் பண்ண அப்போது கலைக்கோட்டு மகாரிசி நீங்கள் சொன்னபடி கேள்க்குறோ மென்று சொல்ல வேஷ்த்திஸ்ரீயள் பல்லக்கு ரூபமாக[4] எடுத்துக் கொண்டு பட்டணத்துக்கு வருகிறது.

24 பட்டணத்துக்கு வருகிறபோது...... ரோமபதனென்ங்குற ராசா எதுகொண்டு வந்து சந்தித்து ப(ண)ட்டணத்துக்கு வருகிறது.

25 ரோமபாத ராசா தன்னுடைய அங்க தேசப்பட்டணத்துக்கு கலைக்கோட்டு மகாரிஷியைப் பாத்து தேவரீர் அடியேனுட தேசத்துக்கு எழுந்தருளினதின் பேரிலே சரமந்தீர மளை வரிச்சுதேயென்று மிகுதியுஞ் சந்தோஷப்பட்டு தன் மகள் சாந்தையைத் தேவரீர் விவாகம் பண்ண வேணுமென்று ராசா சொல்லுகிறது.

வடக்குச்சுவர்

26 ரோமபதன் தன் மகள் சாந்தையை கலைக்கோட்டு மகாரிஷிக்குக் கலியாணம் பண்ணிக் குடுத்தது.

27 [கலைக்கோட்டு மகரிஷியும் மனைவி சாந்தையும் தனித்து இருக்கும் ஓவியம்]

28 தசரத மகாராசா அயோத்தியாபுரி பட்டணத்தில் புத்திற காமேட்டியாகம் பண்ணகிறதுக்கு கலைக்கோட்டு மகாரிஷியைக் கூட்டி வர சுமந்திர உடன் ஆலோசனை பண்ணுகிறது

29 தசரத மகாராசாவும் சுமந்திரருமாக சரவி நதி தாண்டி...... ... பிறப்பட்டது

30 தசரத மகாராசாவும் சுமந்திர பிறதானியும் சதி(ர)ங்க சேனை யளுடனே கூட கலைக்கோட்டு மகாரிஷியண்டைக்கு ரோமபாத ராசா பட்டணத்துக்குப் போறது

31 ரோமபதராசா எதுகொண்டு வந்து தசரத மகாராசாவைச் சந்திச்சது

32 சந்திச்சு கலைக்கோட்டு மகாரிசியை கூட்டி அனுப்பச் சொல்லி ஆலோசினை பண்ணினது

33 அந்தப் படிக்கி ஆலோசனை பண்ணி கலைக்கோட்டு மகரிசியை அளைத்துக் கொண்டு அயோத்திக்கு வருகிறது

34 தசரத மகாராசாவும் பட்டஸ்ரீயளும் (பட்டத்தரியளும்) வசிட்டாசாரியர் கலைக்கோட்டு மகாரிசி சத்திரியஷிளுடனே கூடியிருந்து அசுவமேத யாகம் செய்கிறது

35 தசரத மகாராசா அசுவமேத யாகஞ் செய்யுகிறபோது யாகம் நிறைவேறப் பிர(ா)மண போசனம் செய்ய அவசாட(?)[5]

36 அசுவமேத யாக முடிந்ததின் பேரிலே தசரத மகாராசாவும் பட்டத்திறியளும் சத்திரிசியளும் கூடியிருந்து கலைக்கோட்டு மகாரிசி புத்திரகாமேட்டி யாகம் வளக்கிறது

37 சிவனும் பிரமதேவனும் தெய்வேந்திரன் முதலாகிய தேவர்களும் வைகுண்டத்திலே விஷ்டுணுவினிடத்திலே வந்து னமக்காரம் பண்ணி பூலோகத்திலே ராட்சதர் வுபத்திரம் மெத்தவென்று சொல்ல அப்போது விஷ்டுணு விருந்து சொன்னது நாம் தசரதரிடமாய் ராமா அவதாரமாய் பிறந்து ராட்சத சங்காரம் பண்ணுகிறோம் நீங்களும் வானரங்களாய் பிறவுங்களென்று ஆலோசினை பண்ணி முடித்தது

38 அந்தப்படிக்கு நாமும் தசரத மகாராசவினுட கெற்ப்பத்திலே பிறக்கப்போறோமென்று விசுவரூபங் காண்பிச்சு கெருட வாகனத்தின் பேரிலேறி மாயமானார் அதின் பிறகு தேவர்களும் வானரங்களாய்ப் பிறக்கப் போவோமென்று ஆலோசினை பண்ணிக்கொண்டு போனது

39 கலைக்கோட்டு மகாரிசியும் சத்திரிசியளுங் கூடி புத்திரகாமேட்டி யாகம் வளக்கிறபோது அக்கினிதேவன் பொற தளின கயிலே(?) பிண்டம் கொண்டு வருகிரபோது தசரதனும் பட்டத்தியளும் நமக்காரம் பண்ணி பிண்டம் வாங்கினது

40 கவசலா தேவிக்கு தசரத மகாராசா பிண்டங் குடுத்தது

41 கைய்கைக்கு தசரதர் பிண்டங் குடுத்தது

42 சுமத்திரைக்கு தசரதர் பிண்டங் குடுத்தது

43 சுமித்திரைக்கு.................குடுத்தது

44 கவுசலை கைய்கை சுமித்திரை மூணுபேரும் பிண்டஞ் சாப்பிட்டது

45 கமுசல்லியா பிள்ளைப் பெறுகிறது

46 கைய்கை மெய்நொந்து படுகிறது

47 இந்த செய்தி தசரதரிடம் சொல்ல தாதிமார் போனது

48 சுமித்திரை பிறசூதயானது

49 சுமித்திரா தேவிக்கு லட்சுமண பெருமாளும் சத்துருக்கனும் பிறந்தார்

50 கைய்கைக்கு பரதன் பிறந்தான்

51 கமுசல்லியக்கு ராமசுவாமி பிறந்தார்

52 பிள்ளையள் பிறந்த செய்தியை திசர(தர்)கிட்ட தாதி சொல்லப் போறது

53 பிள்ளை பிறந்த செய்தியை தாதிமார் வந்து தசரதனிடம் சொன்னது

54 பிள்ளை பிறந்த செய்தி கேட்டு சத்திரிசியளுடனே கூட வந்து சரவி னதியில் தீத்தமாடினது

55 தசரத மகாராசா பிள்ளை பிறந்த சந்தோசத்திலே......தாநம் பண்ணிநது

**கிழக்குச்சுவர்**

56 பிள்ளையளைத் தொட்டிலாட்டினது

57 தசரத மகாராசா பிள்ளையளை காது குத்தி கொண்டை போட்டது

58 ——

59 ராமருக்கும் பரதருக்கும் லச்சுமணருக்கும் சத்துருக்நுக்கும் தாயாற்வந்தி மொலை குடுத்தது

60 ராமசுவாமியும் பரதரும் தவந்து வெளையாடையிலே தாயாற் வந்து வெண்ணை குடுத்தது

61 லச்சுமணரையும் சத்துருக்கனரையும் தவந்து விளையாடையிலே வெண்ணை குடுத்து எடுத்துக்கொண்டது

62 ராமசுவாமிக்கு சங்கோட பால் வாத்தது

63 பரதரை அம்மாலை போட்டு முத்தங் குடுத்தது

64 லச்சுமணரையும் சத்துருக்கநரையும் கைபிடிச்சு நடப்பிச்சது

65 வசிட்டர் ராம லச்சுமண பரத சத்துருக்கனரை படிப்பிச்சது

66 ராமசுவாமி மல்லகசெட்டி செலம்பம் படிச்சது

67 ராமசுவாமி கபம் கட்டிநது

68 ராமசுவாமி கைச் செலம்பம் பண்ணிநது

69 ராமசுவாமி பணிக்கச் செலம்பம் படிச்சது

70 ராமசுவாமி பட்டா வீசிநது[6]

71 ராமசுவாமியும் லட்சுமணப் பெருமாளும் பரதரும் சத்துருக்களும் வில்வித்தை படிச்சது

72 ராமசுவாமியும் லட்சுமணப் பெருமாளும் பரதரும் சத்துருக்களும் குதிரையேத்தம் படிச்சது

73 ராமசுவாமியும் லட்சுமணப் பெருமாளும் பரதரும் சத்துருக்களும் யானையேத்தம் படிச்சது

74 ராம லட்சுமணரு பரதர் சத்துருக்கள் ரதமேற்றம் படிச்சது

75 விசுவாமுத்திரருக்கு.........சேதியளைச் சொன்னது

76 தெசரத மகாராசா தங்கள் குருக்கள் வசிட்ட மாமுநியோடே பிள்ளையளுக்குக் கலியாணம் பண்ண ஆலோசனை பண்ணிநது

**வாசலுக்கு மேலே**

77 விசுவாமித்திரை தசரதர் வந்து சாட்டாங்கம் பண்ணி அரமனைக்குக் கூட்டிக்கொண்டு போனார்

78 விசுவாமித்திரரை அரமனையிலே கூட்டி வன்து வச்சு வந்த காரணமேதென்று......... விசுவாமித்திரர் சொன்னது ராட்சதரு ......யாகம் முடியவில்லை ராம லட்சுமணர் ரெண்டு பேரையும் கூட்டி அனுப்ப வேணுமென்று சொல்ல அந்த ரெண்டு பேரையும் அனுப்பக் கூடாதென்று சொன்னது

79 தசரதன் சொன்ன செய்தி கேட்டு விசுவாமித்திரர் கோவிச்சுக் கொண்டு போனது

80 வசிட்டர் சொன்ன செய்தி கேட்டு மறுபடிவந்து விசவாமித்திரரை தெண்டனிட்டு கூட்டிப்போனது

81 விசுவாமித்திரரை அரமனைக்கி கூட்டிப்போனது

வாசலுக்கு இடப்புறம்

82 தசரத மகாராசா சுவாமியையும் லட்சுமணரையும் விசுவாமித்திர பிறகே கூட்டியனுப்பினது

83 விசுவாமித்திர(ர்) சுவாமியை கூட்டிப்போறது

84 விசுவாமித்திர(ர்) சுவாமிக்கு லட்சமணருக்கு மந்திர உபதேசம் பண்ணினது

85 ...... போகையிலே இந்தவனம்......... யெதேவை கௌக்காமா ஆச்சிரமமென்று விசுவாமித்திரர் சொன்னது

86 காமா ஆச்சிரமத்திலே ரிசியளுடனே கூடி இருந்தது

87 சரவிநதி தீரத்திலே சுவாமியையும் லட்சுமணரையும் சபநம் (படுக்க) பண்ணச் சொல்லி விசுவாமித்திர(ர்) கதை சொல்லிக் கொண்டிருந்தது

88 விடிந்ததின் பேரிலே சுவாமியும் லட்சுமணர் விசுவாமித்திரரும் தானம் பண்ணினது

89 சந்தி பண்ணிக் கொண்டது

90 சிவம் பண்ணிக் கொண்டது

91 சுவாமி விசுவாமித்திரரை பாத்து இந்த வனம் மேதென......... பரமனாச்சிரமமென்று சொன்னது

92 இந்த வனத்திலே தாடகை யென்று ஒரு ராட்சதை உண்று உங்களுட வில்லினுட தொனி காண்பிக்கச் சொல்லி சொல்ல அந்தப்படி காண்பித்து அப்போது தாடகை வந்து அட்டகாசம் பண்ணினாள் விசுவாமித்திர.. சுவாமியை...சொன்னது

93 [தாடகையை சம்ஹா]ரம் பண்ணிநது

94 பரம அத்திர உபதேசம் பண்ணிநது

95 ராமசுவாமியை தேவர்கள் வந்து கண்டு பேசிக் கொண்டு போநது

96 விசுவாமித்திரர் தேவா அத்திரங்கள் உபதேசம் பண்ணினது

97 ராமசுவாமியோடே தேவர்கள் வந்து கண்டு பேசிக் கொண்டு போனது [இக்காட்சி இருமுறை வருகிறது]

98 விசுவாமித்திரர் ராம லட்சுமணரை தம்முட ஆச்சிரமத்திலே கூட்டிவந்து வச்சது

99 விசுவாமித்திரர் ராம லச்சுமணரை ராட்ச(த)ர் வராதபடி (கா)த்திருக்கச் சொல்லி யாகம் வளத்தது

100 யாகம் வளக்கிரபோது மாரி சுபாகு ரெண்டு பே(ரு)ம் யாகத்தை அளிக்க வருகிறபோது ராம லச்சுமணர் எதுத்து சுபாகு என்கிரவன் சமுத்திரத்திலே விள எய்தார் மாரீசன்...போனான் அதின் பிரகு யாகம் ஙிறவேறப் பண்ணினது

101 ராம லச்சுமணரை யாகம் ஙிறவேத்தி வச்சியளே என்று ரிசியள் தோத்திரம் பண்ணினது

102 மிதிலைப் பட்டணத்திலே [சனக மகா] ராசா யாகம் வளக்கிறா னென்று ராம லச்சுமணரை மிதிலைக்கு கூட்டிப்போறபோடது ......னாங்கள் திரும்பி வருகிறோமென்று......

103 [விசுவாமித்திரர் ஆற்றில் குளித்தல் ஓவியம்]

104 ராம லட்சுமணரும் விசுவாமித்திரரும் விசாலபட்டணம் வர... ராசா யெதுத்து வந்து கும்பிட்டது

105 ராம லட்சுமணரும் விசுவாமித்திரருக்கும் விசாலபட்டணத்து... ராசா பூசை பண்ணி அனுப்பினது

106 ராம லட்சுமணரும் விசுவாமித்திரரும் விசாலபட்டணம் கடந்து வந்தது

107 ராம (லட்சுமணரும் விசுவாமித்திரரும்) வர்றபோது ராமசுவாமி பாதம்பட்டு அகிலி விமோசனமானது...சுவாமி பாதத்தை அறியாமல் வச்சமென்று கும்பிட்டது[7]

108 ராம லட்சுமணரை அகிலி கும்பிட்டு தங்கள் ஆச்சிறமத்துக்கு அகிலியும் கௌதமரும் கூட்டிப் போனது

## தெற்குச் சுவர்

109 ராம லட்சுமணரையும் கௌதமர் பூசை பண்ணி அனுப்பினது

110 ராம லெட்சுமணர் விசுவாமித்திரரி(டம்) இதென்ன பட்டணம் என்று கேட்டது

111 விசுவாமித்திரர் சனகருடைய மிதிலைப் பட்டணமென்று சொன்னது

112 சனக மகாராசா ஓமம் வளக்கிறபோது வாசகப் பாரா[7*] வந்து விசுவாமித்திரரும் ராம லட்சுமணரும் வந்திருக்கிரார் களென்று ராசாகிட்ட சொன்னது

113 ராம லட்சுமணரையும் விசுவாமித்திர ரி(ஷி)களும் வர்ரபோது சனகமகாராச்ா யெதுத்து வந்து பூசை பண்ணி அரமனைக்கி கூட்டிப் போனது

114 ராம லட்சுமணரை (யாரென்று) சனக மகாராசா விசுவாமித்திரரை கேட்டார் தசரதர் குமாரரென்று சொன்னது

115 ... ... ... ...[7**]

116 ராம லட்சுமணரும் விசுவாமித்தரரும் விடுதிக்கு வந்தது

117 ராம லட்சுமணரும் விசுவாமித்திரரும் விடுதியில் (இருந்தது)

118 ராம லட்சுமணரும் விசுவாமித்தரரும் சனகமகாராசா (கிட்ட) போறது

119 சனக மகாராசா வேவுகாரரை அழைச்சு வில்லெடுத்து வரச் சொன்னது

120 சனக மகாராசா சீதை அம்மனை மடிமேல் வைத்துக் கொண்டு விசுவாமித்திரர் கிட்ட ஒரு வில்லு யிருக்கிறது அதை ராம லட்சுமண ரொடிச்சால் பிள்ளையைக் கட்டித்தர்றோமென்று சொன்னார் ராம லட்சுமணரும் விசுவாமித்திரரும் நல்லது ஒடிக்கிறோமென்று சொன்னது

121 நூறாயிரங்கோடி கிங்கிலியர் வில்லை யெடுத்து வர்றது[8] யிந்த வில்லு யீசுரன் சனகமகாராசாவிடம் குடுத்தது

122 [தேரிலிருந்து வில்லை ராமன் எடுக்கும் ஓவியம்]

123 சனக மகாராசா சீதாங்குனி அம்மனை மடிமேல் வைச்சுக் கொண்டு......... சுவாமி வில்லு முறிச்சது

124 ராம லட்சுமணரையும் விசுவாமித்திரரையும் சனகமகாராசா வெகு சந்தோஷமாச்சுதென்று விடுதிக்கு அனுப்பினது

125 ராம லட்சுமணரும் விசுவாமித்திரரும் விடுதிப்போறது

126 ராம லட்சுமணரும் விசுவாமித்திரரும் விடுதியிலே யிருக்கிற போது ராசா அளைக்கிறாரென்று வேவுகார் அளைச்சுப்போறது நடந்து வர்றது

127 ராம லட்சுமணரையு(ம்) விசுவாமித்திரரையும் சனக மகாராசா அழச்சு பிள்ளையைத் தருகிறோமென்று தேங்காய் தொட்டு குடுத்து உங்கள் தாய் தகப்பனை [வரச் சொல்லுங்களென்று சொன்னது ?]

128 ......விசுவாமித்திரரும் சனக மகாராசா மந்திரியை [அழைத்து?] சுவாமிக்கு கலியாணமென்று (பத்தி?) ரியை அனுப்பினது

129 [சனகருடைய மந்திரி தசரதரை கலியாணத்துக்கு அழைக்கச் செல்லும் ஓவியம்]

130-131 [சனகருடைய மந்திரி தசரதரைக் கண்டு இராமன் வில்லொடித்த செய்தியைக் கூறும் ஓவியங்கள்]

132 தசரத மகாராசா வ(சி)ஷ்டரை அளைச்சுக் கலியாணத்து...... முன்னதாகப் போகச் சொல்லி அனுப்பினது

133 வ(சி)ஷ்ட்டரும் திசரத மகா(ராச)ாவுட மூணுபல்(லக்கி)ல் கலியாணத்துக்கு பிறப்பட்டுப்போறது[9]

134 [தசரத மகாராசா மிதிலைப் பட்டணம் நோக்கி வரும் ஓவியம்]

**வாசலுக்கு இடப்புறம் உள்ள தெற்குச் சுவர்**

*[மேலே 'மிதுலைபட்டணம்' என எழுதப்பட்டுள்ளது]*

135 தசரத மகாராசாவும் சனக (மன்ன)ரும் சந்திச்சு பேசிக்கொண்டு பாளையம் இறக்கச் சொல்லி அனுப்பிவிச்சது

136 சனக மகாராசாவை அனுப்பிவிச்சுக் கொண்டு கூடாரமடிக்கச் சொல்லி பிறப்பட்டுப்போனது

137 சமுசலி (கோசலை) கைய்கை சுமுத்திரையை ராமர் லச்சுமணர் நமக்காரம் பண்ணினது கூடாரத்திலே

138 தசரத மகாராசாவிநிடத்திலே விசுவாமித்திரர் வந்து யாகம் நிறைவேறிச்சு என்று [சொல்லி] சுவாமியையும் லட்சுமணரையும்......பண்ணிவிச்சது

139 சனக மகாராசா தம்முட மந்திரியை அளைத்து கலியாணத்துக்கு தம்முட தம்பி ருச்சத்துசனை[10] அளைத்துவரச் சொல்லி அனுப்பினது

140 குசத்தானும் மந்திரியும் மிதலைக்குப் புறப்பட்டு வருகிறது

141 சனக மகாராசாவும் குச்த்தானை சந்திச்சது

142 சந்திச்சு பேசிக் கொண்டது

143 கலியாணத்துக்கு முகிள்த்தம் பண்ணி பரிசமிட்டது

144 ராமர் பரதர் லட்சுமணர் சத்துருக்கருக்கு வீராட்டி ஓமம் வளத்து கிரீடம் தரித்தது

145 ராம லச்சுமணர் பரத சத்துருக்கரும் பெண்தா, .........காசி யாத்திரை போறபோது சனக மகாராசா... அவருட தம்பி குசத்துசனும் அவர்களுட பெண்களுட வந்து பெண் தருகிறோமென்று கூட்டி வந்தது

146 ராமர் பரதர் லச்சுமணர் சத்துருக்கருக்கு மணக்கோலஞ் செய்தது

147 சீதாங்கனியும் மாண்டபத்தினியும் வூர்முளையும் சுதகீத்தயும் (நாலு?) பேரும் வந்து கலியாணம் முகிக்கிறதுக்கு பார்பதி அம்மனை (வழிபடுகிறது?)[11]

**மேற்குச் சுவர் வலப்புறம்**

148 கலியாணத்துக்கு கேகைய ராசா பிறப்பட்டது

149 மிதிலைக்கு வந்து தசரதருடனே சந்திச்சுப் பேசிக்கொண்டது

150 பெண்க்கு [சீதை, ஊர்மிளை, மாண்டபத்தினி, சதகீர்த்தி முதலிய] எண்ணை தேக்கிறது

151 பெண்க்கு நலுங்கு செய்யுகிறது

152 சீதை முதலாகிய நாலு பெண்களுக்கும் காப்புத் தரிக்கிறது

153 சத்துருக்கருக்கு காப்புத் தரிக்கிறது

154 பரதருக்கு காப்புத் தரிக்கிறது

155 லட்சுமணருக்கு காப்புத் தரிக்கிறது

156 ராமசுவாமிக்கு காப்புத் தரிக்கிறது

157 லட்சுமணப் பெருமாள் ஊருவலம் வருகிறது [யானைமேல்]

158 ராமசுவாமி ஊருவலம் வருகிறது

159 (சத்துருக்கர்) ஊருவலம் வருகிறது

160 பரதர் ஊருவலம் வருகிறது

161 ராமசுவாமிக்கு பிரமதேவனும் சகலமான தேவர்களும் சத்திரியளும் வந்து எக்கியம் வளத்து சீதாங்கனி அம்மனை திருக்கலியாணம் பண்ணினது

162 [பரதருக்கு மாண்டபத்தினி என்கிற பெண்ணை திருக்கலியாணம் பண்ணினது]

163 [லச்சுமணருக்கு ஊர்முளை என்கிற பெண்ணை திருக்கலியாணம் பண்ணினது]

164 சத்துருக்கருக்கு [சுதகீத்தை என்]கிற பெண்ணை திருக்கலியாணம் பண்ணினது

## இராமர் பீடம் ஓவியக் குறிப்புகள்

1 சுவாமி [கண்ணன்] கையில் நாரதர் பாரிசாத புற்பங் கொடுத்தது

2 அந்த புற்பம் அம்மன் கய்யில் கொடுத்தது

3 நாரதர் சுவாமி இடத்தில் புற்பங் கொடுத்தேனென வசகி இடத்தில் சொன்னது சத்தியபாமாயோடே சொல்லச் சொன்னது[12]

4 ராசஸ்ரீ விசயரங்க சொக்கனாத நாயக்கர்......... ஹியாசி விசைய ரகுனாதச் சேதுபதி அவர்களுக்கு ரத்நபட்டாபிஷேகம்

5 மகாநிதி

6 கச்சபநிதி

7 சங்கநிதி

8 முகந்தநிதி

9 குந்தநிதி

10 [பதுமநிதி]

11 [மகாபதுமநிதி]

12 [நீலநிதி]

13 உச்சி அசுவம் [குதிரை]

14 அயிராவதம் [வெள்ளை யானை, இந்திரன் வாகனம்]

15 சிந்தாமணி [வட்டக் கண்ணாடி போல் வரையப்பட்டுள்ளது]

16 பத்ரபீடம்

17 கற்பக விருச்சம்

18 காமதேனு[13] [கீழே சிறிய பசு ஒன்றும் வரையப்பட்டுள்ளது]

19 [இந்திரன், அக்நி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் முதலிய எண்திசைக் காவலர் ஓவியங்கள் அவர் களுடைய வாகனங்களுடன் வரையப்பட்டுள்ளன].

## அடிக்குறிப்புகள்

1 எய்தவிடம்.

2 பட்சிக்காக.

3 ஏட்டுச் சுவடியில் தெலுங்கு எழுத்துக்கள் உள.

4 பெண்களே பல்லக்கு வடிவில் இருந்தல்.

5 காய்கறிகளை நீண்ட அறிவாள்மனையில் நறுக்குதல், அரிசியைக் கல்வேறாக அரித்தல், அரிசியை உலையில் போடுதல், பரிமாறுதல் ஆகிய ஓவியங்கள்.

6 வீரவிளையாட்டுக்கள்.

7 அகிலி - அகலியை.

7* பாரா - காவல்.

7** எழுத்து அழிந்துள்ளது. படிக்க இயலவில்லை.

8 நான்கு சக்கர ரதத்தின்மேல் வில் உள்ளது.

9 103 to 133 காவி வண்ணக் கலவையில் தீட்டப்பட்டுள்ளது.

10 சனகரின் வளர்ப்பு மகள் சீதை, சொந்த மகள் ஊர்மிளை - சனகர் தம்பி குசத்துவசன் மகள்கள் தேவிமாண்டவியும், சதகீர்த்தியும் - இந்நால்வரே மணமகள்கள்.

11 இராமலிங்க விலாசம் பாகவத ஓவியத்திலும் இதுபோன்றதொரு ஓவியம் உள்ளது. கண்ணனை மணக்க விரும்பும் பிராமணப் பெண்கள் அதற்காகப் பார்வதியை வழிபடுகின்றனர்.

12 பாகவத புராண நிகழ்ச்சி.

13 இவை அனைத்தும் பாற்கடலைக் கடைந்தபோது அதிலிருந்து வெளிப் பட்டன - அபிதான சிந்தாமணி.

# பாகவத ஓவியங்கள்

**மேற்குச் சுவர் இடப்புறம்**

1 *பரிச்சித்து மகாராசா.........சுக மகாயோகி பாகவத கதை உபதேசம் பண்ணிகிரபடி*

2 *சத்தியலோகத்திலே பிரம சபையிலே பூமா தேவி பசு ரூபமாக வந்து பூமி பாரம் தாங்காமல் வந்து மொறையிட்டது*

3 *திருப்பாற்கடல் நாதராண்டைக்கி சிவன் பிரம்மா பூமாதேவி அட்ட திக்கிப் பாலகாள் சகலரும் வந்து பூமி பாரம் மெத்த வென்று புருச சூத்தத்தினாலே சதா தாம பண்ண மாயா சுருபமாக நல்லதென்று கிருஷ்ட்டணா அவதாரத்தாலே தீர்க்குரோமென்று அபயம் சொன்னது*

4 *சிவனும் பிரம்மாவும் தேவலோகத்துக்கு வந்து தேவாதியள் சகலரையும் அளச்சு மகாவிஷ்ட்ணு கிஷ்ட்ணா அவதாரம் பிறக்கிறார் நீங்கழும் குடும்ப சகிதமாய் மனிச சுருபமாக அவதரித்து அவருக்குப் பணிவிடை செய்யச் சொன்னது*

5 *வசுதேவனுக்கும் கஞ்சந் தங்கச்சிக்கும் கலியாணம் முகிக்க அவள் தகப்பன் வுக்கிறசேனன் தாரை வார்க்க தேவேந்திரன் தேவ ஷத்திரியாள் அட்டதிக்கிபாலகாள் ரிசிகழும் வந்து கலியாணம் முகிச்சது*

6 *வுக்கிரசேனனும் அவருட பென்ஞ்சாதியும் கஞ்சனும் வசுதேவ னுக்கும் பெண்ணுக்கும் சீதணம் பெண்ங்கள் ரதம் யானை ஆபரணம் மொதலானது குடுத்தது*

7 *[ அசரீரி சொல்தல் ஓவியம் ]*

8 *யிப்படி முறத்துவென்று சொன்னது கேட்டு யிவழாலே யல்லோ நமக்கு முறத்து வென்று தங்கச்சியை வெட்ட எத்தினம் பண்ணிநபடி வெட்ட வேண்டாமென்று வசுதேவன் கையும் கத்தியும் பிடிச்சபடி*

9 வசுதேவன் கஞ்சனைப் பாற்று உன் தங்கச்சியாலே பயமில்லையே அவள் பிள்ளையாலேயல்லோ பயம் அவள் பெறுகிற பிள்ளையெல்லாம் உன் கய்யிலே தாறேன் உனக்குச் சரிப்போனபடி வெட்டிப் போடென்று சொன்னது

10 கஞ்சன் நல்லதென்று சம்மதித்து மச்சினனையும் தஞ்கச்சியையும் உத்தரமதுரை தலத்துக்கு கூட்டிப்போறபடி

11 வசுதேவனும் அவர் பெண்ஞ்சாதி தேவகிதேவியும் தலம் வந்து சேர்ந்து தங்கள் அரமனையில் சமுசாரம் பண்ணுகிறபடி

12 தேவகி தேவிக்கி கெற்பம் தரிச்சது

13 தேவகி தேவி பிள்ளைப் பெறுகிறபடி

14 வசுதேவன் பிள்ளையை எடுத்துக்கொண்டு கஞ்சனிடத்திலே கொண்டுவந்து குடுத்தபோது கஞ்சன் சொன்னது எட்டாங் கெறுப்பத்திலே பெறுகிற பிள்ளையாலல்லோ ஆகாதென்று பிள்ளையைத் திரும்பக் கொண்டுபோகச் சொன்னது

15 வசுதேவன் பிள்ளையை கொண்டுவந்து தேவகிதேவி கிட்ட குடுத்தது

16 நாரதர் வந்து கஞ்சனைப் பாத்துப் பிள்ளையை வெட்டாமல் குடுக்கலாமோ நீங்கள்............... ஆகயாலே மிஞ்சவிடாமல் வெட்டிப்போடச் சொன்னபடி

17 நாரதர் புத்தியைக் கேட்டுக் கஞ்சன் தன் தகப்பன் உக்கிற சேனன் மகள் சகமாக யிருப்பானென்று தகப்பனையும் அவரைச் சார்ந்தவர்களையும் அடிச்சுக் காவல்ப் பண்ணிநபடி

18 வசுதேவனையும் தேவகி தேவியையும் கஞ்சன் வந்து......... பிள்ளையைத் தரச்சொல்லிக் கேட்டது

19 கஞ்சன் அந்தப் பிள்ளையை வாங்கி உசிரோடே (விட்டெறி) கிறபடி

20 கஞ்சன்...... பட்டாபிஷேகம் பண்ணிவிச்சுக் கொண்டது

21 வசுதேவனும் தேவகிதேவியும்...... (இரண்ட)ாவது பிறந்த பிள்ளையைக் கஞ்சன்...... கைய்யிலே வாங்கி சேரப்போட்டு வெட்டினது

வடக்குச் சுவர்

22 மூனாம் கெற்ப்பத்துலே பிறந்த பிள்ளையை வாங்கி வெட்டிகறது

23 நலாங் கெற்ப்பத்துலே பிறந்த பிள்ளையை வாங்கி வெட்டுகிறது

24 அஞ்சாங் கெற்பத்திலே பிறந்த பிள்ளையை வாங்கி வெட்டுகிறது

25 ஆறாங் கெற்ப்பத்திலே பிறந்த பிள்ளையை வாங்கி வெட்டிகிறது

26 ஏழாங்கற்ப்ப தரிச்சது

27 [பாற்கடலிலே பரந்தாமன் தேவியுடன் ஆதிசேசன் மீது அமர்ந்திருத்தல்]

28 - 29......

30 ஆயர்பாடியிலே நந்தகோபன் பெண்சாதி அசோதை துற்கையை கெற்பம் தரிச்சது

31 ரோகுணிதேவி பளிக்குடிச்சது

32 பலபத்திர ராமனை ரோகுணி தேவி முலை குடுத்து வளத்தது

33 தேவகி தேவிக்கு...... மகாவிட்ணு கிட்டிண அவதாரம் பெறக்கிற... தேவர்கள்...... பண்ணினது

34 [ கண்ணன் பிறக்கும் ஓவியம் ]

35 கிட்டிணன் பிறந்து முலை குடிச்சது

36 ...பிறந்த பிள்ளையை தாராட்டினது. .... கஞ்சன் கைய்யிலே குடுக்கச் சொன்னது

37 தகப்பன் கையிலே குடுத்து ஆய்பாடிக்கி அனுப்பினது

38 வசுதேவன் ஆய்பாடிக்கு சுவாமியை எடுத்து வருகையில் அய்ந்தலை நாகம் குடை பிடிச்சது

39 யிப்படி வாரபோது முநாநதி வழிவிட்டது

40 யிப்படி வசுதேவன் சுவாமியைக் கொண்டு வந்து ஆயப்பாடியிலே நன்தன் வீட்டிலே அசோதை தூங்குப போது கிஷ்ட்டணறை வச்சு துக்கையை யெடுத்து வாரது

41 ஆயப்பாடியிலே யிருக்கிர குடியாநவறுகளெலாம் மெய்மரந்து வநங்கிரது

42 [ துக்கை குழந்தை இவர்கள் கைக்கு மாறுதல் ஓவியம் ]

43 ......

44 யிருந்து வளருகிறானென்று சொல்லிப்போட்டு துக்கை மாயமாய்ப் போநது

45 நந்தனுக்கு பிள்ளை பிறந்த செய்தி தானாபதிப் பொண்டுகள் வந்து சொன்னது

46 நந்தன் தானத்துக்குப் (ஸ்நானம்) பிரப்பட்டது

47 நந்தன் தானம் பண்ணினது

48 நந்தன் தானம் பண்ணிப் பிரப்பட்டது

49 நந்தன் பிராமணருக்கு கோதான முதலாகிய தானமெல்லாம் பண்ணினது

50 குடியானவகள் னந்தனை காண வருகிரது

51 [நந்தன் பிள்ளையைக் காணும் ஓவியம்]

52 [குடியானவர்கள் முன்னே செல்ல நந்தன் ரதத்தில் செல்லும் ஓவியம்]

53 54 55 — — —

**கிழக்குச் சுவர் - வலப்புறம்**

56 கம்சன் பேச்சி கடாசுரன்... வற்களை அளச்சு கிஷ்ட்ணனைக் கொண்ணு போட்டுவரச் சொன்னது

57 பேச்சி பிள்ளைத்தாச்சி வடிவாக முலையிலே விஷத்தை தரிச்சு வந்து நந்தன் மனையிலே புகுந்து கிஷ்ட்ணனை எடுத்து முலை குடுக்கப்போரது முலைப்பாலுடனே அவளுயிரையும் கூட வாங்கி கொன்று யோசனை தூரத்திலே போட்டது
அசோதை வந்து பிள்ளையை எடுத்து வந்தது

58 யிப்படி பிள்ளையை எடுத்து வந்து... வாங்கி எந்திரம் கட்டி ஆலத்தி எடுத்தது

59 கிஷ்ட்ணனுக்கு அசோதை பால் பொட்டினது

60 நந்தன் கஞ்சநிடத்திலே அனுப்பிவிச்சுக் கொண்டு தங்களுருக்கு வாரவழியிலே பேச்சி கிடந்ததைப் பார்த்து எடுத்து எறிஞ்சு போடச் சொல்லி வந்தது

61 நந்தன் வசுதேவநிடத்திலே கிஷ்ட்ணன் மகாவிஷ்ட்ணுவென்று கேட்ட வாற்தையை அசோதையோடே சொல்ல அப்போது மகாபதியோடே கும்பிட்டு சரணம் பண்ணினார்கள்

62 நந்தனும் அசோதையும் பிள்ளையை மடியிலே வச்சுக் கொஞ்சுறது

63 பிள்ளையைத் தொட்டியிலே வச்சு தாராட்டிறபோது சகடாசுரன் வண்டி ரூபமாக உருண்டு கொல்ல(வர) தொட்டியிலே கிடந்த பிள்ளை அவனை காலாலே உதைந்து யுதம் பண்ணிக் கொண்ணார் அப்போது தாயும் தோளிப் பெண்களும் வோடிவந்து எடுத்துக்கொண்டு வந்தாற்கள்

64 பிள்ளையை எடுத்து முத்தமிட்டு மடியிலே வச்சுக்கொண்டு தகப்பந் நந்தகோபனுங் கூடயிருந்து பிராமணனை அளைச்சு களிப்ப......டிதோஷம் வாங்கி விச்சது

65 தாயும் பிள்ளையும் முத்தத்திலே மெத்தைமேலே படுக்கவச்சு கிலுகாட்டி விளையாடுநபோது துருணா வத்தன சூறாவழி காத்தா வந்து ஆகாசத்திலே எடுத்துப்போறபோது அவனை யுத்தம் பண்ணிக் கொண்ணுபோட்டார் அப்போது தாய் பதறி வந்து எடுக்க தோளிப் பெண் வந்து ஆலத்தி எடுத்தாள்

66 வசுதேவனும் தேவகியும் தங்கள் புரோகிதன் கார்க்கேயரை அளைத்து ஆய்பாடிக்கிப் போய் நந்தனிடத்திலே போய் பிள்ளைக்குப் பேரிட்டு வரச்சொல்லி அனுப்பினது

67 நந்தகோபன் புரோகிதரை எதிர்வந்து அளைச்சுப் போனது

68 கிஷ்டணனுக்கும் பலபத்திர ராமருக்கும் பேரிட்டது

69 கிஷ்ணனைத் தாராட்டினது

70 கிஷ்ணனை நீராட்டினது

71 அசோதையும் நந்தகோபனும் கிஷ்ணனுடனே விளையாடினது

72 கிஷ்ணன் தாய் தகப்பனிடத்திலே விளையாடிக் கொண்றிருக் கிறாப்போலேயிருக்க மாயாரூபமாய் ஊரிலே...... புகுந்து தயிரையும் குடிச்சு னித்திரை போறவகளையும் ஆகாத்தியம் பண்ணி விளையாடினது

73 யிப்படி விளையாடிறபோது கிஷ்ணனை...... உலக்கையிலே கட்டிக்கொண்டு அசோதையிடத்திலே சொன்னது...... கட்டி யிருந்த கயறு மாயப் போச்சுது அப்போது குடுமியில்......

74 - 75 - 76 - 77 ... ... ...

93 நந்தகோபன் தன்னுட மந்திரி (உ)பநந்தனை அளைத்து நாமிந்த ஊரிலிருந்து மட்டும்... பிள்ளையளுக்குத் தத்துக்களாய் யிருக்கிறது என்று சொல்லி ஊரைவிட்டு எங்கேயாகிலும் பிறப்பட்டுப் போவோமென்று சொல்ல அப்போது உபநந்த னிருந்து ...... எழுவன் தீரத்திலே குருந்தவனமென்று ஒரு தலமிருக்குது (அங்கு) போனால் நமக்கும் மாடு கண்ணுக்கும் சவுரியமாயிருக்குமென்று சொல்ல நந்தன் சம்மதிச்சு வலசை எடுத்து குருந்தவனம் பிறப்பட்டது

94 நந்தன் குருந்தவனத்திலே வந்து குடியேத்தி யிருந்தது

95 கிஷ்ணன் காலி மேத்திருக்கயில் வச்சாசுரரெந்கிர........ (கன்றுகு)ட்டி ரூபமாக வந்தான் அதை கிஷ்ணன் அறிந்து விழா மரத்தோடே அடித்து சங்காரம் பண்ணிநது

96 [கொக்கு உருவில் வந்த பகாசுரன் வாய் பிளத்தல் ஓவியம்]

**அர்த்தமண்டபம் தெற்குச் சுவர்**

**(கதவுக்கு வலப்புறம்)**

97 பகாசுர சம்மாரம் பண்ணின மறுநாள் மாடு மேய்க்கப்போன இடத்திலே வேணுகானம் பண்ணியும் ஓடுகிற தண்ணி அணைக் கட்டியும் தபசுகள் செய்தும் நாட்டியமாடியும் மடுக்களிலே அமிர்தங் கடைந்தும் கிஷ்ணன் தோளமாருடனே விளையாடி மாடு மேச்சது

98 ...வீட்டிலே இருந்து கட்டிச்சோறு (கட்டிச்சோறு) காவடியள் கட்டிக்கொண்டு காட்டிலே மாடு மேய்க்கப் பிறப்பட்டுப் பொய்கையில் நீந்தி விளையாடி (தோளர்)களுடனே கூத்தாடியு மரங்களேறியும் ஊஞ்சலாடியு மல்லுக்கட்டி விளையாடியும் வருகிறது

99 ... பகாசுரன் தம்பி சற்ப்பாசுரன் பறுவதாகாா....ளந்து கொண்டு கிடக்க மார்க்கமென்று வாயிலே பசுக்(களும்) பிள்ளையாண்டான்களும் பூந்தார்கள் அதின்பேரில் (குஷ்ண)ன் புகுந்து வயிற்றைக்(கீறி)ச் சற்பாசுரரையும் கொன்னுபோட்டு பிற்பாடு கிஷ்ணன் சற்ப்பாசுரனுக்கு மோட்சம் கொடுத்தது

## கிழக்குச் சுவர் - இடப்புறம்

78 கிஷ்ணன் மண் திண்ணானென்று பலபத்திரர் தாயிடத்திலே சொல்ல தாய் கயறு எடுத்து அடிக்க வருகிறபோது கிஷ்ணன் நான் மண் தின்னவில்லை என்று வாயைப் பிளந்து காண்பிச்சார் அப்போது பதினாலு லோகமும் வாயிலே கண்டு வாயை மூடச் சொல்லி பயந்து கும்பிட்டது

79 யிடச்சியள் னித்திரை பண்ணிகிறபோது கிஷ்ணன் பயகளுடநே போய் கதவுகள் திறந்து ஏணி வச்சு ஏறி தயிருங்குடிச்சு ஆகாத்தியம் பண்ணினார்கள் அப்போது பிடிச்சு அடிக்க வருகிறபோது நாங்கள் விருந்துண்ண வந்தோமென்று சொல்லி ஓடிப்போனார்கள்

80 தோளமாரைப் பிடித்து...... தான் கள்ளனென்று அவர்களுடமையை களத்தி ஒழிக்க அவகள் தங்கள் வுடமையை தரச் சொல்லி...... விளையாடினது

81 தோளமாரை நீங்கள் தாசியள் னான் நட்டுவனென்று சொல்லி அவர்களை ஆட்டிவிச்சு விளையாடினது

82 ...... விளையாடினது

83 கண்பொத்தி விளையாடினது

84 ஊஞ்சல் கட்டி விளையாடினது

85, 86, 87, 88, 89, 90 - எழுத்துக்கள் சிதைந்து அழிந்துவிட்டன

91 கிஷ்ணன் உரலை இளுத்துக்கொண்டு மன்தைவளியிலே வந்தது

92 மருதும(ர) வில்வமரமாய் நின்ற மரத்தை முறித்துக் குபேரனுடைய பிள்ளையள் மதுகைடபவாள் சாபம் தீத்ததின்பேரில் நந்த அசோதை முதலான பேர் மரமுறிஞ்ச சத்தம் கேட்டி கிஷ்ணனை எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போனது

100 *[வானத்தில் தோன்றும் தேவர்களை தோழர்க்குக் கிஷ்ணன் காட்டுதல் - ஓவியம்]*

*101, 102 - அழிந்துள்ளன.*

**கதவுக்கு இடப்புறம்**

103 பிரமதேவன் பிரமிச்சு நின்றதை கிஷ்ணன் **கண்**டு விசுவரூபத்தை அடக்கி முன்னாலே செறுங்கயுமாய் கண்ணுதேடின ரூபமாய் நாலு திக்குயோடித் திரிந்தான்

104 கிஷ்ணனுட மகிமையை நம்மாலே அறியப்படாதென்று பிரமதேவன் அன்ன வாகனம் விட்டெறங்கி கிஷ்ணனை தெண்டன் பண்ணி அறியாமல்ச் செய்தேனென்று முன் ஒழித்து வைய்த்தப் பிள்ளையளையும் கண்ணுகளையும் ஒப்பிச்சுப் போனார்

105 பிரமதேவனை அனுப்பிவிச்சுப்போட்டு தாமுண்டுபண்ணின பேரை அடக்கம் பண்ணிக்கொண்டு உடனிருந்த பயகளையும் கண்ணுகளையும் கூட்டிக்கொண்டு முன் எமுனா தீரத்திலே கண்ணு(கள் மேய்த்து)ப் போனபோது மிஞ்சியிருந்த சோறுண்டது

106 எமுனையில் சோறுண்டுபோட்டு ஊருக்கு வந்தது

107 மறுனாள் கண்ணுகள் ஓட்டிமேய்த்து எமுனா தீரத்திலேயிருந்து விளையாடுகிறபோது சிறிதாமனென்கிற கோபாலகன் கிஷ்ணன் கிட்டவந்து சுவாமியிருந்த வனத்திலே ஒரு பனெந்தோப்பு யிருக்குது அதிலே தேனுகாசுரனென்று ஒரு ராட்சதன் யிருக்கிறான் அவனை சங்காரம் பண்ணச் சொன்னது

108 கிஷ்ணன் பனைந்தோப்பிலே வந்து விளையாடுகிறபோது தேனுகாசுரனெங்கிற ராட்சசன் களுதை (பேடியாக) ஆங்காரத்தோடே வந்தான் அவனை ... அடித்து சங்காரம் பண்ணத் தேவர்கள் வந்து ... தோன்றினார்கள்

109 ...சங்காரம் பண்ணிப்போட்டு தங்களுக்கு வந்து செயனம் பண்ணிக்கொண்டது

110 மறுனாள் கண்ணுமேய்க்கப் போன யிடத்தில் காழிங்கமடுவிலே தண்ணீர் குடித்தது

111 [காழிங்கன் என்னும் ஐந்து தலை நாகம் கிஷ்ணனைச் சுற்றிக் கொள்ள அதன்மீது கிஷ்ணன் நடனமாடும் ஓவியம்]

**அர்த்தமண்டபம் மேற்குச் சுவர்**

**வலப்புறம்**

112 அக்கினியை...... உண்டுபோட்டு......மறுநாள் பட்டணத்துக்கு வந்தார்கள்

113 ......போனார்கள் அப்போது கஞ்சன் பிராமபாசுரனை அனுப்பினான்......வந்து கிஷ்ணனைக் கண்டு பந்தடிச்சு விளையாடுகிறபோது கிஷ்ணன்...பலபத்திரருமர்... கொல்ல வேணுமென்று ஆகாச வீதியிலே கொண்டு போனான் அதை பலபத்திர அறி... அவனைச் சங்காரம் பண்ணி வருகிறபோது கிஷ்ணன் எதுகொண்டுபோய் ஆலிங்கனம் பண்ணிக்கொண்டது

114 ....சங்காரம் பண்ணி வருகிறபோது அக்கினி வந்து சுத்திக் கொட்டுது அப்போது பயகள் பயந்து கிஷ்ணனிடத்திலே சொல்ல அப்போது னீங்கள் பயப்படவேண்டாம் னாம் தீத்து... (அவர்கள்) கண்ணை மூடிக்கொள்ளுங்கொளென்று சொல்ல அந்தப்படிக்கி அவர்கள் கண்ணை மூடிக்கொண்டார்கள் அப்போது அக்கினி உபத்திரமில்லாமல் கிஷ்ணன் மாயரூபமா... பண்ணி கண்ணுகளையும் பயகளையும் உபத்திரமில்லாமல் ஊருவந்து சேரப்பண்ணினது

115 ......வேணுமென்று மளை காலட்சிமி(யையும்) பசுக்களையும் கிஷ்ணன் பூசை பண்ணி(னது)

116 கிஷ்ணன் வனத்திலே னின்று சீங்குழலூதிறபோது அந்த னாதத்தைக் கேட்டு மலையள் வனங்களிலே உள்ள மிறுக சாதியளும் பச்சியளும் பட்(ட)ணத்திலேயுள்ள திறி(ஸ்திரி) சாதியளும் தங்களுட வேலையளை விட்டுப்போட்டு வனத்திலே வோடிவந்து கிஷ்ணனை கண்டு சகலரும் மோகிச்சு னின்றார்கள்

117 நாங்கள் சகலமான பெண்களும் கிஷ்ணனுக்கு பாரியாக வேணுமென்று பார்பதியைப் பூசை பண்ணினது

118 பெண்கள் பூசை பண்ணி மறுபடி எமுனையிலே னீராடுகிற போது யிவர்களுட விசாரத்தை கிஷ்ணனறிந்து மெள்ள(ல்ல) ஓடிவந்து அவர்களுட சீலையளை எடுத்துப்போனது

119 கிஷ்ணன் சீலையளை எடுத்துக்கொண்டு புன்னை மரத்திலே ஏறியிருக்கிறபோது பெண்கள் ஓடிவந்து தங்களுட சீலையளைத் தரச்சொல்லிக் கேட்டார்கள் அப்போது கிஷ்ணனிருந்து னீங்கள் நமக்கு பாரியாக வேணுமென்று விரதமாயிருக்கிறபேர் னிறுமாணத்தோடேக் குளிக்கலாமோவென்று அலக்களிச்சு சீலையளையும் குடுத்து உங்கள் மனசுப்படியே பாரியாக்கிக் கொள்ளுகிறோமென்று சொல்லி அனுப்பினது

120 கிஷ்ணன் கண்ணு (மே)ய்க்கிறபோது தோளமார் பசிக்கிதென்று சொல்ல அப்போது அக்கிறாரத்திலே சோறு வாங்கி வரச் சொல்லி அனுப்பினது

121 (அக்)கி(றார)த்திலே பிராமணரைச் சோறு கேட்டதுக்கு யில்லை என்று சொன்னார்கள்ளென்று கிஷ்ணனிடத்திலே சொல்ல மறுபடி அவர்கள் பெண்டுகளிடத்திலே போய் கேள்க்கச் சொல்லி அனுப்பினது

122 அந்தப்படிக்கி பெண்களிடத்திலே போய் கிஷ்ணன் சோறு கேட்டு வாங்கிவரச் சொன்னானென்று சொல்ல அப்போது பெண்கள் அதிய பிரியத்துடனே பாலுஞ் சே(று)ம் பழமும் எடுப்பிச்சுக்கொண்டு தாங்களும் கூடவந்து கிஷ்ணனுக்கு உபசாரங்கள் பண்ணி.. சாப்பாடும் பெரவிச்சு கிஷ்ணனையும் அனுப்பிவிச்சுக் கொண்டு அக்கிறாரத்துக்குப் போனது

123 நந்தகோபனும் அசோதையும் கிஷ்ணனிடத்திலே வந்து நாங்கள்....தும் வருஷத்திலே ஒருனாள் தெய்வேந்திரனுக்குப் பொங்கலிட்டுக் குடுப்போமென்று சொல்ல அப்போது கிஷ்ணனிருந்துத் தெய்வேந்திரனாலே ஆகிற காரியமென்னாம் பிராமணருக்கும் பசுக்களுக்கும் மலையளுக்கும்ப் பொங்க லிடுவோமென்று சொல்ல அந்தப்படிக்கித்தானே பிறாமண

போசநமும் பண்ணி பசுக்களுக்குப் புல்லும் குடுத்து மலையளுக்குப் பொங்கலிட்டு தீபதூபமும் குடுத்து னமஷ்க் காரம் பண்ண அப்போது கிஷ்ணன் மாயம் பண்ணி மலைக் குள்ளேயிருந்து படைத்த சோறு கறி எல்லாம் வுண்டது

124 மலைக்கிப் பிறதெச்சணமாக வந்து தெண்டன் பண்ணிச் சகலமான பேர்களும் ப(ட்)டணத்துக்குப் போயிருந்தது

125 தெய்வேந்திரன் மந்திரிமாரை அளைத்து கிஷ்ணன் நம்மை நினையாதபடிக்கி பண்ணினான் அவனைக் கொல்ல வேணு மென்று ஆலோசனை பண்ணியபடி எறும மளையுமாய் வரச்சொல்லி அனுப்பினது

126 அந்தப்படிக்கித் தெய்வேந்திரன் வெள்ளானை மேலேறிக் கொண்டு யிடி ஏறும்மளையுமாய்த்தானே குந்தவனப் பட்டணத்தை ஏழுனாள் அடைமளை பெய்விச்சான் அப்போது கிஷ்ணன் தெய்வேந்திரனுட பிறாக்கிறமம் அறியவேணுமென்று மலையை (கு)டையாகப் பிடித்து ஏளுனாளும் சகலமான செனங்களையும் காத்து லட்சித்தது

127 அடைமளையும் காத்துக்கும் சகல சனங்களையும் காத்து லட்சித்தாய் என்று கிஷ்ணனை நந்தகோபன் அசோதை முதலாகிய சனங்களும் வந்தனை பண்ணினது


128 தெய்வேந்திரன் கிஷ்ணனுட பிறக்கிறாமத்தைக் கண்டு பிரம தேவனிட மாயமாய்ப் போயிதென்ன (மா)யமென்று கேள்க்க பிரமதேவன்......ன்னது பூமி பாரம் தீர்க்கவேணுமென்று னாறாயணமூத்தி கிஷ்ண அவதாரமாய் வந்திருக்கிறார் அவரைப் போய் னீ வேண்டிக்கொள் என்று சொல்ல அந்தப்படிக்கி வந்து சாட்டாங்கம் பண்ணி பூசை பண்ணினது

129 கிஷ்ணனுக்குப் பட்டாபிசேகம் சூட்டவேணுமென்று தெய்வேந் திரன் அவனுட தாயார்[திதிதும்?] காமதேனும் சகலமான தேவர்களும் வந்து கிஷ்ணனை முப்பத்து முக்கோடி புண்ணிய தீத்தங்களையும் வெள்ளா(னைகளி)லே ஏத்திக் கொண்டு வந்து அபிசேகம் பண்ணவிச்சதும்......(பட்டாபிசேகம் சூட்டினதும்.

—அர்த்தமண்டபச் சுவர் ஓவிய எழுத்துக்கள் முற்றுப்பெற்றன.

[குறிப்பு : இராமலிங்க விலாசம் ஓவிய எழுத்துக்கள் சுமார் 250 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் உரை நடைக்கு மிகச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு எனலாம். அக்காலத்தில் ஓலைச் சுவடிகளில் எழுதப்பெற்றதுபோல மெய்யெழுத்துக்களின் மேல் புள்ளி வைக்கப் பெறாமலும், எகர ஒகர நெடில்கள் தனித்தும், மெய்யெழுத்தோடு இயைந்தும் வருகின்றபோது நெடிலாக எழுதப்பெறாமல் குறிலாகவே எழுதப்பட்டும் [சான்று சேதுபதி—செதுபதி, கேட்டார்கள்—கெட்டார்கள்; ஏணி—எணி] ஒரு வாக்கியம் முடிவடைந்து மற்றொரு வாக்கியம் தொடங்கும்போது இடையில் முற்றுப்புள்ளி வைக்கப் பெறாமலும்; ரகரமும் துணை எழுத்தும் வித்தியாசமில்லாமலும் [சான்று : நாரதர்—நாாதா]; லகர ளகர மெய்களுக்கு அருகில் மெய்யெழுத்துக்களைப் பயன்படுத்தியும் [சான்று : காவல்ப்பண்ணிந படி, கேள்க்க] எழுதப்பட்டுள்ளன. இவற்றின் நடை இராமநாத புரம் பகுதி மக்களின் பேச்சு நடையில் உள்ளது மற்றொரு சிறப்பு அம்சம்.

சில இடங்களில் காரை உதிர்ந்துள்ளது. சில இடங்களில் எழுத்துக்கள் சிதைந்து மறைந்துள்ளன. எனவே படிப்பதற்கு இயலாதவிடங்களில் புள்ளிகள் வைக்கப்பட்டுள்ளன. அப்பகுதியை இப்படிப் படிக்கலாம் என்று தோன்றுகிற வாசகங்கள் அடைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. முழுமையாக ஓவிய எழுத்துக்கள் சிதைந் துள்ள இடங்களில் ஓவியம் பற்றிய விளக்கங்கள் மட்டும் கொடுக்கப் பட்டுள்ளன.]



இராமலிங்கவிலாசம், இராமநாதபுரம்.